# காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

6/22



விலை 20 காசு

14-12-69

# கடவுளுக்குத் தெரியும்!

—புலவர் அரிமதி-தென்னகன்

“ஏந்தே, இங்கே கொஞ்சம் வாயேன்”

“என்னம்மா, எதுக்காகக் கூப்பிட்டே”

ஆமாம். ரிக்ஷாக்காரனாக இருந்தும் ரங்கன் தன் மனைவியை இன்னும்மே, ஏம்மே என்று அழைப்பதும் இல்லை; அப்படிப் பேசுவதும் இல்லை.

‘தாய்க்குப்பின் தாரம்’ என்பது போல் தாயை இழந்த ரங்கன் தன் மனைவிக்கு, தன் தாய்க்குத் தரும் மரியாதையைக் கொடுத்துப் பழகி விட்டான்.

‘ஏந்தே, பொறப்படறப்போ கூப்பிட்டேன்னு கோவமா?’

‘அதெல்லாம் ஒன்னும் இல்லே; என்ன விஷயம்?’

‘இன்னிக்காவது டாக்டரு எழுதிக் குடுத்த மருந்தை வாங்கியாரியா?’

“பாக்கலாம்மா”

தனக்குப் பிறந்த தன் ஒரே மகனைச் சாவிலிருந்து மீட்கும் அந்த மருந்தைக்கூட வாங்கிக்கொடுக்க முடியவில்லையே என்ற ஏக்கம் ரங்கனின் வார்த்தையில் பிரதிபலித்தது.

கண்களில் நீர் பொங்க, பேசவும் முடியாமல் மரம்போல் நின்றாள் ரங்கனின் மனைவி.

கால்போன போக்கில் ரிக்ஷாவை ஓட்டிக்கொண்டு, எண்ணத்தை எங்கோ மேய விட்ட ரங்கனுக்குத் தன் மனைவி காலையில் சொல்லியதும், கண்கலங்க நின்றதும் ஏதோ சினிமா பார்த்த நினைவாக நிழலாடியது.

‘ஹும், கடவுள் இன்னைக்குக் கூடவா கண் திறக்காமெ போயிடுவான்?’

‘இந்தாப்பா, ரிக்ஷா வரியா?’ ஒரு குரல் ரங்கனின் ஓட்டத்தை நிறுத்தியது.

‘எங்கங்க ஐயா போகனும்?’

ரங்கனின் வார்த்தை, ‘இவன் ரிக்ஷா ஓட்டுபவனா?’ என்ற சந்தேகத்தை நின்றிருந்தவருக்கு ஏற்படுத்தி விட்டது.

அந்த சந்தேகத்தை நீட்டிக்கவிட்டு விடைகாணும் நிலையில் ‘அந்த ஆள்’ இல்லை. ஏதோ ஒரு —பரபரப்பு; துடிதுடிப்பு அவரை நிற்கவே விடாதபோது, இந்த ஆராய்ச்சிக்கெல்லாம் அவருக்கு நேரமேது?

அந்த ஆளை ஏற்றிக்கொண்டு ரங்கனின் தேர் புறப்பட்டது.

‘ஐயா எங்க போகனுங்க?’

‘விழுப்புரம் போகனும்பா’

‘என்ன வேலையோ?’

‘ஒரு கம்பெனியிலே வேலையில் இருக்கேன்’

‘சரிதாங்க; அர்பன் பேங்கிலே பணம் கட்டிட்டுப் போறிங்களா?’

‘ஒரு ‘செக்’ஐ மாத்திகிட்டுப் போறேன்’

அமைதியே தன்னை மிரட்டுவதாக நினைத்த அந்த ஆளுக்கு ரங்கனின் பேச்சு ஏதோ ஒரு ஆதரவாக இருந்தது.

ரிக்ஷா, திண்டிவனத்திலேயே பெயர் பெற்ற இராமவிலாசம் உணவு விடுதி பக்கம் சென்றது. நல்ல பண்பாலும், அன்பாலுமே வாழ்க்கையில் உயர்ந்த அந்த ஓட்டல் உரிமையாளரைப் பார்த்து ஒரு ‘சலாம்’ அடித்தால்தான் ரங்கனுக்குப் ‘பிரியாணி’ சாப்பிட்ட திருப்தியாக இருக்கும்.

‘ஏம்பா, ஒன்னு கேட்கிறேன், கோவிச்சுக்கமாட்டியே?’

‘சும்மா கேளுங்க’

‘உன்னைப் பார்த்தா ரிக்ஷாகாரனாட்டம் தெரியலையே; பேச்சு நடத்தையெல்லாம்புதுசா இருக்கே’

ரங்கனைப் பற்றிய சிந்தனையால் அந்த மனிதருக்குத் தன்னைப்பற்றிய நினைவு கொஞ்சம் குறைந்தது. ஒரு வகையில் அது நல்லதாகவே இருந்தது அவருக்கு.

ரங்கனுடைய அமைதிப் போக்கைப் பார்த்து, ‘ஏம்பா, நான் கேட்டது தப்பாப்படுதா உனக்கு’ என்றார் அவர்.

அதெல்லாம் இல்லிங்க; என்னைப் பார்த்தா ரிக்ஷாகாரனாட்டம் இல்லேன்னிங்களே, அப்படின்னா...... ரிக்ஷாகாரன்னா தனியா தெரியும்னு இல்லே ஆகுது. அப்படி ஆயிடுதுங்க இந்த தொழில். இன்னும் கொஞ்ச நாள் போனா ரிக்ஷா ஜாதின்னு ஒரு ஜாதியே உண்டாகிடும் போல இருக்கு. பேச்சைக் கேட்டாலே, ஆளைப் பார்த்தாலே ரிக்ஷாகாரன்னு தெரிஞ்சுக்கலாம்னு பேசற அளவுக்கு ஆயிடுச்சேன்னு நினைச்சா வருத்தமா இருக்கு.

ரிக்ஷாகாரன் பாஷன்னு ஒரு பாஷையே இல்லே இப்போ உண்டாயிடுச்சு.

ரிக்ஷாவை நிறுத்தினான் ரங்கன்; ‘நீங்க இருங்க’ என்று சொல்லிவிட்டுச் சென்ற ரங்கன், ‘வண்டி இன்னைக்கு ஒரு மணி நேரம் லேட்டாம்’ என்று சொல்லி விட்டு, தன் தலையில் கட்டியிருந்த, கருப்பு சிவப்புத்துண்டை அவிழ்த்து முகத்தைத் துடைத்துக் கொண்டான்.

‘இந்தாப்பா இதை வச்சுக்கோ’ என்று ஒரு ரூபாய் சில்லறையைக் கொடுத்தார் அந்த மனிதர்.

‘இந்தாங்க, முக்கால்ரூபா போதும்’ என்று சொல்லிவிட்டு, நாலணாவைத் திருப்பிக்கொடுத்தான் ரங்கன்.

‘பரவாயில்லே நீவச்சுக்கோ’

வேண்டாங்க, உழைச்சதுக்குக் கூலிதாங்கவேணும்; அதிகமா நீங்க அன்பளிப்பா கொடுத்தேன்னு சொன்னாலும், நான் அநியாயமா வந்த காசுன்னுதான் நினைக்கிறேன.

உழைச்சு சம்பாதிக்கிறது தாங்க கடைசிவரைக்கும் ஒட்டும்; நான் வரேங்க”

தன்போக்கில் போய்க்கொண்டிருந்த ரங்கனை அந்த மனிதனின் கண்கள் பார்த்துக் கொண்டிருந்தாலும், அவனின் நெஞ்சம் ‘உழைச்சு சம்பாதிக்கிறது தாங்க கடைசி வரைக்கும் ஒட்டும்’ என்று திரும்ப ஓங்கிக் குரல் கொடுத்துக் கொண்டே இருந்தது.

அவனுடைய கைப்பிடியில் இருந்த அந்தத்தோல் பை இப்போது மலையாகக் கனத்தது.

ரங்கன் தன்னிடமிருந்த பணத்தை எண்ணிப் பார்த்தான். இத்தனை நாளைவிட இன்றைக்கு எவ்வளவோ பரவாயில்லைதான். ஐந்து ரூபாய் கிடைத்துள்ளது. வண்டி வாடகை இரண்டரை ரூபாய் போனால், மீதி இரண்டரை

(14-ம் பக்கம் பார்க்க)

# காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 10 ஆறுமாத சந்தா ரூ. 5

மலர் 6 | 14—12—69 | இதழ் 22


# மன்னிப்போம், மறப்போம்!

புகழின் உச்சிக்குப் போகப்போகத்தான் பொறுமையும், தன்னடக்கமும் தேவை; அந்த உச்சியிலிருந்து கீழே உருட்டிவிடப்படும்போது; அவை தேவையில்லை என்று எண்ணிக்கொண்டு செயல்படுபவர்களை என்ன உவமையால் எடுத்துக்காட்டுவது என்றே திண்டாட வேண்டி வந்துவிடுகிறது. காமராசரை நினைவுகொண்டுத் தெளிக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிற போதெல்லாம், நாம் இந்தத் திண்டாட்டத்துக்கு ஆட்பட்டாகவேண்டியிருக்கிறது.

மிகமிகக் கீழ்மட்டத்திலிருந்து, மிகமிக மேல் மட்டத்துக்கு உயர்ந்து சென்றவர் என்பதைவிட, உயர்த்திவைக்கப்பட்டவர் காமராசர் என்றே கூற வேண்டும். கோபுரத்தின்மேல் ஏற்றிவைக்கப்பட்ட குரங்கு, கோபுர பொம்மையாகிவிட முடியாது என்பது போலவே, மிக உச்சியில் ஏற்றிவைத்தாலும், அந்த இடப்பெருமையைக் காத்துத்தரும் அறிவும், ஆற்றலும் அற்றுப்போனவர் அல்ல—அறவே இல்லாதவர் என்ற காரணத்தாலேதான் காமராசர், வேகவேகமாக கீழே உருட்டித் தள்ளப்பட்டார்!

மனிதன் அங்கக் குறைவுடன் பிறக்கக்கூடும்; மூளையே இல்லாதவனாகப் பிறப்பான் என்று எவரும் இதுவரையில் கண்டறிந்து காட்டிவைக்கவில்லை. மூளை வளர்ச்சியடையாமல் போகக்கூடும்; சீரிய சிந்தனைகளை ஈன்றுதராமலிருக்கக்கூடும். அதற்காக "மூளையற்றவன்" என்று எவரையும் குறிப்பிட்டுவிட முடியாது.

மேலே இருந்து கீழே உருண்ட வேகத்தில் காமராசரது வளர்ச்சியடையாத மூளை, கலங்கியும் போய்விட்டிருக்கிறதோ என்றே எண்ணவேண்டி இருக்கிறது! காமராசரை ஒதுக்கிவிட்டுப் போய்க்கொண்டிருக்கலாமென்று, ஒதுங்கி ஒதுங்கிப்போனாலும், பசைபோல ஒட்டி ஒட்டிக்கொண்டே வந்துவிடுகிறார்! பரிதாபத்துக்குரிய மனிதர்!

மூளை கலங்கிப்போகாத நேரத்திலேயே, வளர்ச்சியடையாத நிலை காரணமாக நாட்டின் யதார்த்த நிலைமைகளைப் புரிந்துகொண்டு, செயல்பட முடியாமல் இருந்தவர், கலங்கிப் போயிருக்கின்ற இந்த நேரத்தில், கருத்துத் தெளிவுடன் இருக்க முடியும் என்று எவரும் நம்பமுடியாதுதான்.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும், தமிழ்நாடு அரசின் முதலமைச்சருமான கலைஞர் கருணாநிதி அவர்கள், இந்திரா அம்மையாரின் அரசுக்கு நிபந்தனையுடன் கூடிய ஒத்துழைப்புக் கொடுக்கப்படும் என்று அறிவிப்புக் கொடுத்த நேரத்திலிருந்து, பாவம் காமராசர் பரிதாபத்துக்குரிய காமராசராகிவிட்டிருக்கிறார்! மூளைக் குழப்பத்தின் உச்சியையே எட்டிப் பிடித்திருப்பார்போலிருக்கிறது.

ஒரு அரசுக்கு ஆதரவு காட்டுவது வேறு; அந்த அரசின் கட்சிக்கு ஆதரவு காட்டுவது வேறு என்பது கூட புரியாத நிலையில் காமராசர், இத்தனைக்காலம் எப்படி அரசியல் வாணிகம் புரிந்துவந்தார் என்றே நம்ப முடியவில்லை.

திராவிட முன்னேற்றக் கழகம், மத்திய அரசுக்கு ஆதரவு அளிப்பதன் மூலம், பாராளுமன்றத்துக்கான இடைத்தேர்தல் நாடெங்கும் நடத்தவேண்டிய ஒரு வேண்டப்படாத சூழ்நிலையைத் தடுத்து நிறுத்தி இருக்கிறது என்கிற வகையில், துணைக்கண்டம் முழுவதும் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு நன்றிகூறித் தீர வேண்டும். இடைத்தேர்தல் நடத்தும் நிலை மூலம் இந்திராவின் செல்வாக்குக்கு இழுக்கு தேடலாம்; இயன்றால் வீட்டுக்கேகூடத் துரத்திவிடலாம் என்று கட்டியிருந்த மனக்கோட்டையை, தூள் தூளாக்கியது கழகம்.

தமிழக முதல்வர் அவர்கள், பற்பல சந்தர்ப்பங்களில், நிலையான மத்திய அரசு, நிலைத்திருக்க வேண்டும் என்பதற்குத்தான் கழகம் ஆதரவு காட்டுகிறதே, அல்லாமல் "இந்திரா" என்பதற்காக அல்ல; இந்திராவின் "காங்கிரஸ்" என்பதற்காக அல்ல என்றே எடுத்துக் காட்டியிருக்கிறார். அல்லாமல் நிபந்தனையற்ற சரணாகதியை கழகம் அடைந்துவிடவில்லை. நாட்டின் நலனுக்குக் கேடுண்டாக்கும் போக்கில் மத்திய அரசு செயல்படத் தொடங்கினால், ஆதரவு திரும்பப்பெற்றுக் கொள்ளப்பட்டுவிடும் என்பதையும் தெளிவாகவே விளக்கியிருக்கிறார் கழகத் தலைவர்.

இவையாவும், மூளை கலங்கிப்போயிருக்கின்ற காமராசருக்குப் புரியாமற்போய்விட்டிருக்கிறது என்பது தான் வியப்பாக இருக்கிறது.

> "தி. மு. கழகம் இப்போது பெயரை மாற்றிக்கொள்ள வேண்டும்; திராவிட முன்னேற்றக் காங்கிரஸ் என்று மாற்றிக் கொள்ளவேண்டும்"

என்பதாகப் பேசி, தம் மேதாவிலாசத்தைக் காட்டிக் கொண்டிருக்கிறார்! தம் மூளைத் தெளிவின்மையைப் புலப்படுத்தி இருக்கிறார்!

தி. மு. க. இப்போது இந்திரா காங்கிரசையோ, நிஜலிங்கப்பாவின் காங்கிரசையோ ஆதரித்துக்கொண்டிருக்கவில்லை. மத்திய அரசுக்குத்தான் ஆதரவு கொடுத்திருக்கிறது; அதுவும் நிபந்தனையுடன்!

திராவிட முன்னேற்றக் காங்கிரஸ் என்று பெயர் மாற்றிக்கொள் என்று பேசி இருக்கிறார் அந்தப் பெரியவர்!

பாராளுமன்றப் பெரும்பான்மையின் மூலம், இந்திராவே இனி, உண்மையான காங்கிரஸ் என்றாகிவிடப்போகிற எதிர்காலச் சூழ்நிலையை எண்ணிப்பார்க்காத நிலையில்—அப்போது, தான் பங்குகொண்டிருக்கும் காங்கிரஸ்தான் பெயர் மாற்றிக்கொள்ள வேண்டியிருக்கும் என்பதை உணரமுடியாதவராக, ஊருக்கு

(15-ம் பக்கம் பார்க்க)




[7]

"உண்மை! அந்த மருதமே, என் மனதை மகிழ்வித்தவள், அவளுடைய விதவைக்கோலம் வெளி உலகுக்கு. எனக்கு அல்ல! வீரனே! மலர்புரி அரசிக்கு நான் ஆசை நாயகனாக இருந்தேன்! வஞ்சனைக்கல்ல. அதிகாரம்பெற அல்ல! அன்பால் நாங்கள் இருவரும் சேர்க்கப்பட்டோம். ஆடிப்பாடிக் களித்தோம் அரண்மனை என்பதை மறந்தோம். சோலையிலும் சாலையிலும் சுந்தரமாகச் சரசமாடினோம். அந்த நாளை எண்ணிக்கொண்டால் என் மனம் கரையும். நான் கலிங்கநாட்டிலிருந்து கிளம்பி, பல மண்டலங்களைக் கண்டு மகிழ்ந்து ஒரு நாள் மலர்புரி வந்தேன், மலர்புரி மருங்கேயுள்ள ஒரு சோலையிலே உலவிக்கொண்டு இருக்கையில், கம்பீரமான உருவுடன் ஒரு ஆரியன், என்னை அணுகினான். அவனுடைய நடையும் உடையும் என் மனதைக் கவர்ந்தது. அவன் என்னை அன்போடு ஏற இறங்கப் பார்த்தான். நான் ஆச்சரியத்துடன் அவனெதிர் நின்றிருந்தேன். "பொருத்தமான பாத்திரம்! அரண்மனைக்கேற்ற பண்டம்! என் யோகத்திற்கு ஏற்ற தண்டம்!" என்று மெல்லச் சொன்னான். நான் ஆரியரே! ஏதேதோ கூறுகிறீர். என்னை ஏற இறங்க பார்க்கிறீர். என்ன விஷயம்? என்று கேட்டேன்.

"குரலிலே ஒரு குளிர்ச்சியுமிருக்கிறது. குமரி பாடு கொண்டாட்டந்தான். எனக்குமட்டுமென்ன?" என்று தன்னை மறந்து பேசினான். எனக்குக் கோபமும் வந்தது! அவனுடைய தோளைப்பிடித்து குலுக்கினேன். மரத்தைப் பிடித்தாட்டினால் கனி உதிர்வது போல அவன் கல கலவெனச் சிரித்து விட்டு, "குழந்தாய்! உன்னை அதிர்ஷ்டதேவி அணைத்துக் கொள்ள வருகிறாள். உனக்கு யோகம் பிறக்கிறது" என்று கூறினான் என்னை உற்று நோக்கியபடியே. 'அதிர்ஷ்டதேவியாவது அணைத்துக்கொள்வதாவது' என்று நான் கூறினேன். ஆரியன், என் இரு கரங்களையும் பற்றிக்கொண்டு, "வாலிபனே! உன்னை அழகும் இளமையும் ததும்பும் ஒரு அரசகுமாரிக்கு விருந்தாக அளிக்கப்போகிறேன்" என்றான்.

நான் பல மண்டலங்களிலே சுற்றிவந்தபோது பல சுந்தராங்கிகளைக் கண்டு சொக்கியதுண்டு. சிலர் கிடைக்காததால் கருத்து கெட்டதுண்டு என்றாலும், தானாக இந்த வாய்ப்பு வருவதென்றால், எவ்வளவுதான் குதூகலம் பிறக்கும்! அவள் எப்படி இருப்பாளோ! எவளோ எக்குணங்கொண்டவளோ, மதிமுகவதியோ மந்திமுகவதியோமலர்க்கொடியே மாமிசப்பிண்டமோ, சரசக்காரியோ விரசவதியோ, என்று ஒரு விநாடியிலே என்மனதிலே எண்ண அலைகள் எழும்பின. என் முகத்திலே பொலிவுபிறந்திடக் கண்ட ஆரியன் புன்னகையுடன், "கன்னிபற்றிய பேச்சே கனிருசியாக இருக்கிறதே! கன்னியைக் கட்டித் தழுவும்போது, ஆஹா! வாலிபனே! எந்த நிலையில் இருப்பாயோ? என்னை நினைப்பாயோ மறப்பாயோ!" என்று கேலி செய்தான்.

"என்ன பேச்சய்யா பேசுகிறீர்! தோட்டம் தெரியாமுன்னம் தொடுத்திடு மாலையை என்று கூறுகிறீர், யார் அம்மங்கை? அவ்வளவு மலிவாகக் கிடைக்கக் காரணம் என்ன? என்னைக் கண்டதும் உமக்கு இக்கருத்து ஏன் உதித்தது!" என்று அடுக்கடுக்காக நான் கேள்விக்கணைகளை விடுத்தேன். ஆரியன் சொன்னான்: வீரா! நீ அறியாயோ, நாங்கள் கால நிலை உரைப்பதுடன் காமநிலையும் உரைப்போர்

என்பதை. காதற்கணைகளை எடுத்துச் சொல்ல எம்மிலும் மிக்காரும் உண்டோ? பொருத்தமுரைக்க அறிவோம்! பொன்னுக்கு மெருகு வேண்டுவது போல், உங்களின் வாழ்வு இனிக்கவேண்டுமானுல், எமது "முலாம்" பூசப்படவேண்டும் குழந்தாய்! நான் உன்னை இந்த மலர்புரி அரசி மருதவல்லி என்ற மங்கையின் மணுளனுக்கப்போகிறேன்" என்ருன்.

"மலர்புரி அரசிக்கு மணவினை இன்னம் நடக்கவில்லையோ?" என்று நான் கேட்டேன்.

"நடந்தது நலிந்தது. அவள் நாயகனை இழந்தாள்; நரம்பு தன் முறுக்கை இழக்கவில்லை. நேத்திரத்திலே ஒளி குன்றவில்லை. நுதலிலே மதி தவழ்கிறது. இதழோ கொவ்வை! இடை கொடிதான்! குணமோ, தங்கம்! குயிலோ என்பாய், குரல் கேட்டால். கொஞ்சிடும் பருவம், கோலமயில் சாயல்" என்று ஆரியன் வர்ணித்தான்.

"என்னை மயக்குகிறீர்" என்று நான் கூறினேன் அடி மூச்சுக் குரலால்.

ஆரியன், பின்னர் மெள்ளச் சொன்னுன்: "மருதம், விதவை! அவளுக்கு உன்னைப் பரிசளிக்க நான் தீர்மானித்ததற்குக் காரணம், ஆண்டவனின் பிம்பமே அவளை ஆரத்தழுவி ஆனந்தமூட்டும் என்று நான் பல நாட்களாகக் கூறிவந்தேன். நோன்பிருக்க வைத்தேன், பூசைகளுக்கும் குறைவில்லை. பேதை, அவள், ஆண்டவனை ஆரத்தழுவ முடியாது என்பதைஅறியாள். ஆண்டவனின், உருவமாக, உன்னைத்தான் நான் செய்யப்போகிறேன். பட்டத்தரசி நித்தமும் பூஜிக்கும் பாகீரதி கோயிலின் பூசாரிநான். மலர்புரியை அவள் ஆள்கிருள். அவள் மனதை நான் ஆள்கிறேன். அவனை உனக்கு அளிக்கிறேன். ஆனுல் ஒரே ஒரு நிபந்தனை. நீ மானிடன் என்றுகூறிடக்கூடாது; ஆண்டவனின் பிம்பம், என் தபோவலிவால் தருவிக்கப்பட்டவர் என்றே கூறவேண்டும். அவளிடம் ஆடிப்பாடிக் களிக்கலாம், ஜோடிப்புரு போல் வாழலாம். ஆனுல், எக்காரணத்தை முன்னிட்டும், உமது உண்மை வரலாற்றை நீ உரைத்திடக்கூடாது. உனது இச்சைப்படி மற்றவற்றிலே நடக்கலாம் என்ருன். என் ஆச்சரியத்துடன், சற்று ஆத்திரமும் புகுந்தது. "ஓஹோ! உணர்ந்தேன் உமது கபட நாடகத்தை! அரசியின் விதவைக் கோலத்தைக் கண்டீர், வைதீக வஞ்சனையால் வென்றீர், என்னை இரவல் தந்து, அரசியின் உயிரை விட மேலான மானத்தை உமது உள்ளங்கையிலே வைத்துக் கொண்டு, அரசியை மிரட்டி வாழச் சூது செய்கிறீர். இதற்கு நான் ஒரு கூலியா! என்னை என்னவென்று மதித்தீர்?" என்று கேட்டேன். ஆரியன் சினங்கொண்டானில்லை. 'சகஜமான எண்ணங்களே, உனக்குத் தோன்றின. ஆனுல் அவை அத்தனையும் தவறு. அவளை நான் இப்போதும், "பாகீரதியின் அருளால்" என் கைப்பாவையாகத்தான் கொண்டிருக்கிறேன். உன்னை நான் உபயோகிக்க வேண்டுமென்ற அவசியமே இல்லை. உலகிலே ஆணழகன் நீ ஒருவன்தானே!" என்று கேட்டுவிட்டு, "அவளுடைய வாலிபத்துக்கு விருந்திடவே இந்த யோசனை. வேறெதற்குமல்ல! பரிதாபம்! அவளுக்கு எல்லாம் இருக்கிறது. அரசு, அந்தஸ்து, அழகு, இளமை, செல்வம் யாவும் இருக்கிறது; பயன் என்ன? அவளை அணைத்துக்கொண்டு "அன்பே! ஆருயிரே! இன்பமே!" என்று கொஞ்சிக் குலவிட ஒருவன் இல்லை. அது அவள் குற்றமுமல்ல! ஆடவரைக் காணும்போது தன் அரசு என்ற கடிவாளத்தை பூட்டியே இச்சை எனும் குதிரையை இழுத்துப் பிடிக்கிருள். ஆனுல், அந்தப் பொல்லாத குதிரை, சும்மாவா இருக்கிறது! அவளைப் படாத பாடு படுத்துகிறது. அவளை அந்தச் சிறையிலிருந்து மீட்கவே, நான் உன்னை அழைக்கிறேன்" என்ருன். என் இளமை, ஆரியன் கூறுவதை ஏற்றுக்கொள்



என்று தூண்டிற்று. என் ரோஷ உணர்ச்சி, சீ! வேண்டாம் என்று சொல்லிற்று. தலைகுனிந்து நின்றேன். தரையிலே, நீர் தளும்பும் கண்களுடன், அழகு ததும்பும் அந்த அணங்கின் உருவம் தெரிவது போலிருந்தது, பெரு மூச்செறிந்தேன்.

என் வாலிபத்துக்கு விருந்தளிக்க, அழகும், இளமையும், அந்தஸ்தும் படைத்தவளைத்தர ஆரியன் வந்தது என் நெஞ்சிலே நினைப்புச் சுழலைக் கிளப்பிவிட்டது. நான் அதனிடம் சிக்கிவிட்டேன். இன்று, நடை தளர்ந்து, தேகமொடுங்கிய பிறகு, எவ்வளவு வெறிபிடித்து அலைந்தோம் இளம்பிராயத்திலே என்று எண்ணவேண்டி இருக்கிறது. அப்போது அப்படியா! நல்ல மலர், சுவையுள்ள கனி, இன்பகரமான இசை, இவையாவும் ஓருருக்கொண்டுலவும் மங்கையென்றால், நரம்புகள் நர்த்தனமாடின. நெஞ்சு அலைந்தது. நேத்திரம் சுழன்றது! வாலிபனே நீ அறியாததா! பாவம்! இப்போது நீயும் அந்த நிலையில் தான் இருப்பாய் என்று எண்ணுகிறேன். எவள் உன் நினைப்பால் சோழ மண்டலத்திலே சோர்ந்து கிடக்கிறாளோ, யார் கண்டார்கள்! புன்னகை புரிகிறாய், போர் வீரா! ஆரியன் அன்று என்னை அழைத்ததுபோல் உன்னை அழைத்தால், உதாசீனம் செய்வாயோ! உல்லாசத்துடன் உலவ ஊராரிலே யார் விரும்பார்கள்! நான் இசைந்தேன். ஆரியன் தலை அசைத்தான்; பின்னர் சொன்னான்:

"மலர்புரி அரசியின் மனோரதம் இனி நீயே! மருத வல்லிக்கு இனி நீயேமதி, நிதி, கதி. விதவைக் கோலத்திலுள்ளஅந்தகொண்டைவிழிக்கிளிக்குஇனி நீயே வாழ்க்கைச் செண்டு, பாடிடும் வண்டு! காதல், பூத்திடச் செய்வதே என்போன்றோரின் தொண்டு. காதல், என்றால் சாமான்யமா? காதலுக்கும் கடவுளுக்கும் பேதமொன்றில்லை. காலவேறுபாடு அதை அழிப்பதில்லை. கவிகள் அதினின்றும் தப்புவதில்லை. கலைக்கு அதுதான் பிறப்பிடம். உலக வாலிபர்களின் ஊஞ்சல், அந்த உத்தியான வனத்திலே இனி நீ உலவலாம். மருதம் இனி உன் மனோஹரி. ஆனால், நான் சொன்னதை மறவாதே! நீ ஆண்டவனின் பிம்பம், தேவஜோதி, கடவுட்கனி. ஆமாம், மானிடனல்ல. மானிட உருவந் தாங்கி வந்து மருதத்தை மகிழ்விக்கப் போகும் மகேஸ்வரன்!" என்று ஆரியன் கூறிடுகையில், கோமளவல்லியுடன் கொஞ்சிடப் போகிறோமே என்ற குதூகலம் ஒரு புறம் என்னை இழுப்பினும், ஆரியக் கடவுட் தன்மை பற்றிய சந்தேகம் மற்றோர் புறம் என்னை இழுத்தது. நான் தாமிரபரணி, வைகை, காவேரி, பாலாறு, ஆகிய நதிகளை மாலையாகக் கொண்டுள்ள தமிழகத்தில் இதுபற்றிய தர்க்கங்களைக் கேட்டிருக்கிறேன். தத்துவார்த்த உரைகளைப் பலர் பேசிடக் கேட்டதுண்டு. எனவே, ஆண்டவன், மானிட உருக்கொண்டு, மங்கையருடன் மந்தகாசமாக இருப்பது முறை என்று ஆரியன் பேசிடக் கேட்டதால், எனக்கு, எவ்வளவு இழிந்த கொள்கையை இந்த ஆரியர்கள் சுமந்து திரிகிறார்கள் என்று எண்ணவும், வெறுப்படையவும் ஏற்பட்டது. ஆனால் என் செய்வது! 'தேன் பருக வாராய்' என்று அவன் அழைக்கும்போது உமது தேவனின் சேதி எப்படி? என்று கேட்பதா? "சரி! உமது இஷ்டப்படியே நடக்கிறேன்" என்று சுருக்கமாகக் கூறி விட்டேன். "விவேகமுள்ளவனே! கேள்; நாளை இரவு எட்டு மணிக்கு, நீ பாகீரதி கோயிலுக்கு வா! அரசி, இரவு 10 மணிக்குமேல், ஆடை அணி புனைந்து, பரிமளகந்தம் பூசி, தங்கத்தட்டில், பழவகைகளும், தங்கக் கோப்பையில் பாலும் எடுத்துக் கொண்டு வருவாள்—ஒவ்வோர் நாளும் இதுபோல் வழக்கம். நாளையத் தினந்தான் அரசியின் ஆசை பூர்த்தியாகப் போகிறது. எட்டு மணிக்கு நீ அங்கு வந்ததும், உனக்குச்சில விசேஷ அலங்காரங்கள் செய்யவேண்டும். தேவ வடிவத்துக்குத் தேவையான "மூலாம்" பூசப்படவேண்டாமா! பிறகு உன்னைப் பாகீரதி சிலைக்குள் போயிருக்கச் செய்வேன்—திடுக்கிடாதே! அதற்கு வழி இருக்கிறது—சிலையினுள் நீ இருந்து கொண்டிருக்கும்போது, அரசி சிலையும் உருகும்படி வேண்டிக்கொள்வாள்; ஆராதிப்பாள், அர்ச்சிப்பாள். நான் கணகணவென மணியை அடித்து, "அம்மே! பாகீரதி! அடியவரை இன்னமும் சோதிக்காதே. அரசியாரின் மனதை வதைக்காதே! உன் ஜோதியை ஆண் உருவில் வெளியே அனுப்பு! இகபரசுகத்தை இன்றே மருத வல்லியார் அடையும் மார்க்கத்தை அருள்!" என்று கூறுவேன். மைந்தா! மெச்சினேன் உனது பூஜா விசேஷத்தை! குமாரி! கண்களை மூடிக்கொள்!" என்று கெம்பீரமான குரலிலே கூறு. அரசியின் கண்கள் மூடுமுன்னம், சிலையினுள்ளே இருக்கும் விசையைத் திருப்பு, பாகீரதி இரு கூறு ஆவாள். உடனே வெளியே வா! பாகீரதி பழைய நிலை பெறுவாள்! ஆச்சரியத்தாலும் ஆனந்தத்தாலும் தாக்கப்பட்டு, மருதம் மயக்கத்துடன் குழந்தை குரலிலே "தேவா!" என்று கூறுவாள்! மார்போடு அணைத்துக் கொள்! பார் அப்போது அவள் மார்பு படபடவென அடித்துக்கொள்ளப்போவதை! பிறகு, நான்கோயில் திருவிளக்குகளைக் குளிரவைத்து விடுவேன். மூலஸ்தானத்தை மூடித் தாளிட்டு விட்டு வெளியே செல்வேன். விடியுமுன் வருவேன். அதற்குள்உனது மதன வித்தையைக் காட்டு" என்றான்.

வளரும்

## வாழ்க—இராஜாஜி!

நாட்டு விடுதலைப் போராட்டத்தில் காந்தியடிகளின் தலைமையில் முன்னின்று பங்கேற்றுப் பல கொடுமைகளை ஏற்றவரும், விடுதலைபெற்ற இந்தியாவின் கவர்னர்-ஜெனரலாகப் பதவி வகித்தவரும், இந்திய அரசியலில் தமக்கென ஓர் தனி இடம் பெற்றவரும், உலகப் பெருந்தலைவர்களின் மதிப்புக்குரியவரும், தமக்குச் சரி எனப்படும் எந்தக் கருத்தையும் துணிந்து வெளியிடக்கூடிய இயல்புடையவரும், இந்தி எதிர்ப்பு அணியின் முன்னணியில் இருந்து வருபவரும் 'சுதந்தரா' கட்சி கண்டவரும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தோழமையை என்றும் விரும்புபவருமான மூதறிஞர் இராஜாஜி அவர்கட்கு 91 வயது முடிந்து 92-வது வயது துவங்குவது அறிந்து மகிழ்கிறோம். அவர் இன்னும் பல்லாண்டுகள் வாழ்ந்து நாட்டுக்கு நல்ல வழி காட்ட வேண்டுமென்று 'காஞ்சி' சார்பில் வாழ்த்துகிறோம்,

—ஆசிரியர்.

# அன்று, அது தெரிந்துவிடும்!



**அன்புள்ள நண்பா!**

கணவன் மீது கோபித்துக்கொண்டு தாய் வீடு சென்ற மனைவி, அவ்வாறு வந்தது தவறு என்று கண்டிக்கின்ற தன் பெற்றோரிடம், கணவனைப்பற்றிச் சில மிகைப்படவே கூறி, அவனது தவறுகளையும், கொடுமைகளையும் தேவையான அளவுக்கும் அதிகமாகவே விமர்சனம் செய்து, தான் செய்தது சரிதான் என்கிற முறையிலேயே வாதாடுவதென்பது பொதுவாகவே உலக இயல்புக்கு ஒத்த ஒன்றுதான்! நின்று நிலவிக்கொண்டிருக்கும் ஒரு நடைமுறைதான். இதைப்போலவே, ஆத்திரத்தின் உச்சிக்கு வந்துவிட்ட கணவன், தன் மனைவியின்மீது கோபத்தைக் கொட்டி அவளை வீட்டைவிட்டுத் தாய் வீட்டுக்கனுப்ப, அவனதுபெற்றோருக்கோ மற்றோருக்கோ காட்டுகின்ற காரணங்களும் மிகைப்பட்டதாகவே இருக்கும். இந்த நேரங்களிலெல்லாம், கூறப்படுகின்ற குற்றச்சாட்டுக்கள் மிகைப்படுத்தப்படுவனவா, அல்லவா என்ற ஆராய்ச்சியை உரியவர்கள் மேற்கொள்வதில்லை

ஆனால் நண்பா, கணவன்மீது மனைவியோ, மனைவி மீது கணவனோ குற்றங்களைக் கண்டுபிடித்து, மிகைப்படுத்தி விபரீதங்களை விளைத்துவிடுவதனால், அந்தக் குடும்பம் எந்த அளவுக்குப் பாழாகிவிடுகிறது என்பதை நடுநிலையிலிருந்து ஆராய்ந்து பார்ப்போர் வருந்தாமலிருக்கமாட்டார்கள். கெட்டுப்போன அந்தக் குடும்பம், தன்னோடுமட்டும் போய்விடுவதில்லை; கூடவே, அதன் சமுதாயத்தையும் ஏச்சுக்கும் பேச்சுக்குமட்டுமேயல்லாமல் இழிவுக்கும்கூட ஆட்படுத்தியல்லவா விடுகிறது? நல்லோர் கவலைப்படாமலிருக்க முடியுமா?

ஒரு குடும்பத்திலேயே இப்படி நிலையேற்பட்டால் அதன் எதிரொலி கண்டு ஏக்க மூச்சுக்களை உகுக்க வேண்டியிருக்கிறபோது நண்பா, நாட்டின் நிகழ்ச்சிகளுக்கே பிறப்பிடமாய், கருப்பையாய் இருக்கின்ற அரசியல் கட்சிகளுக்கிடையே இதுபோன்ற அபவாதங்கள் கிளப்பப்படுகின்றபோது, விழிகளைத் திறந்து வைத்து வேடிக்கைப் பார்ப்பதுடன் நின்றுவிட முடிகிறதா? முடியுமா உன்னால்?

கட்டிலறையில் காதலியுடன் கண்துயின்றுகொண்டிருந்த கணவன், கண்டது என்ன கொடுமையையோ தெரியவில்லை — காதலியை மட்டுமல்ல, கருப்பையைவிட்டு வந்துவிட்ட கனிச்சாறு மழலையையும்கூடவிட்டுவிட்டு, நள்ளிரவென்றும் பாராது அரண்மனையைவிட்டே யார் கண்ணுக்கும் 'காட்சி' கொடுத்துவிடாமல் காட்டுக்குப் போனானுமே, புத்தன்—அந்தப் புத்தன் அப்படி காடேகிய காலத்தில் எத்தனைப்பேர் என்னென்ன பேசியிருப்பர்? இருசாராருக்கும் உரியவர்கள் என்னென்ன ஐயங்களையெல்லாம் தமக்குள் ஏற்படுத்திக்கொண்டு விவாதித்திருப்பர்! செய்தியைக் கேள்விப்பட்டு சிந்தை நொந்தோர் அல்லது வியந்தோர்தம் விமர்சனங்கள் எத்தனை எத்தனை காவியச் சுவைகளை அடக்கியனவாயிருந்திருக்கும்?

காதலியைக் கானகத்தில் காரிருளில் கைவிட்டுப் போனவனின் போர் மனத்தால் புண்பட்டுப் போனவர்கள் எப்படியெல்லாம் நிகழ்ச்சிக்கு உருக்கொடுத்து உலவவிட்டிருப்பர். நாடாண்ட நளன் என்று எண்ணி இகழ்ந்திருப்பர் எத்தனையோ பேர். நாடாண்ட நளனுக்கா நத்தியது இக்கேடென்று நவின்றதுடன் நின்றவரும் இருந்திருக்கக்கூடும். நளன் நல்லன விடுத்து அல்லன புரிந்தான்; அதன் பயன் இன்று அவனையே அலைக்கழிக்கிறது என்றெல்லாம் தன் நீண்ட நாளைய இதயம் எப்படி இருக்கிறது என்பதை, கிடைத்த சந்தர்ப்பத்தில் எடுத்துக் காட்டிக்கொண்டவரும் எத்தனையோ பேர் இருக்கலாம்! கதையாக இல்லாமலிருந்திருந்தால்!

எப்படியோ நண்பா, அன்றும்சரி, இன்றும் சரி, வீட்டில் நடந்தாலும் நாட்டில் நடந்தாலும் நல்லதானாலும், தீயதானாலும் நாலுபேர் நாலு விதமாகப் பேசத்தான் செய்வர்! நன்று செய்தான் என்று நவில்வார் உண்டு! தீயன இழைத்தான் என்று தீயினும் தீயதாய் காய்வாரும் உண்டு.

வள்ளுவன் வாழ்க்கையில்கூட களங்கம் காண முயல்வோர் இருக்கிறார்கள் என்றால், புத்தன்பற்றியோ, ஏசுபற்றியோ, காந்திபற்றியோ கதைகள் கூற மனிதர்கள் பிறக்காமலிருக்கமாட்டார்கள் என்று நம்பக்கூடாதல்லவா!

காந்தி, புத்தன், ஏசு போன்றோர்க்கே இந்தக் கதியென்றால், அரசியலில் உள்ளோர்க்கு, ஆராதனை மட்டும்தான் இருக்கும் என்று எப்படி நண்பா, எதிர்பார்க்க முடியும்? மரம், பழுத்துவிட்டபோது, ஔவால்களை வாவென்று கூவி வாய்மடுக்காவிட்டாலும், கூட்டங்கூட்டமாக குலைபறித்துத் தின்னக்கூசுவதில்லையே ஔவால்கள்! பழுத்த மரத்துக்குத்தான் கல்லடியென்ற பழமொழிகூட தமிழுக்கும், தமிழருக்கும் சொந்தமுடையதாயிற்றே!

1967-ம் ஆண்டு அரசியல் நிகழ்ச்சிகளுக்குக் கொஞ்சம் உருவகம் கொடுத்துக்கொள் நண்பா!

இந்தியத் துணைக்கண்டத்திலே எவ்வளவு பெரிய பூகம்பம் ஏற்பட்டு, எவ்வளவு பெரிய விபத்து நிகழ்ந்

தது! அரசியல் பூகம்பத்தைத்தான் சொல்கிறேன்! காங்கிரசுக் கட்சி தன்னையல்லால் இந்த நாட்டையாரும் ஆளும் பாக்யம்—அல்ல. அல்ல திராணை வேறெந்தக் கட்சிக்கும் இல்லையென்ற இறுமாப்போடு இருபதாண்டுக்காலம் இருந்து வந்ததனை. எத்தனைத் துரிதமாக — எவ்வளவு பெரிய அதிர்ச்சிகளையெல்லாம் உருவாக்கித் தந்துவிட்டு, இறுமாப்பினைக் கீழே இறக்கிக்காட்டிற்று. ஒன்பது மாநிலங்களிலே காங்கிரசு அரசு இல்லை என்ற புதிய சரித்திரத்தையே 1967-ம் ஆண்டு படைத்துக் காட்டியது மட்டுமல்ல! 1949-ம் ஆண்டிலே பிறந்த திராவிட முன்னேற்றக்கழகத்தை 1967ல் ஆளும் கட்டிலில் அமர்த்திவைத்தது!

பேரறிஞர் அண்ணா அவர்களின் உயிரைக்குடித்துவிட்ட உழைப்பு அதன் பலன் 1967 தி.மு.க. அரசு! நண்பா, அறிஞர் அண்ணா அவர்களும், அண்ணா அவர்களின் அன்புத் தம்பிமார்களாகிய முன்னணித் தலைவர்களும், அமைச்சர்களும் சேர்ந்து தமிழுக்கும் தமிழர்க்கும் நன்றி கூறினார்கள்! எந்த வடிவத்தில்? தமிழ் மாநாடு—எனும் பேரால்!

தமிழகத்தின் மூலைமுடுக்குகளில் இருந்த தமிழ் உள்ளம் படைத்த — தமிழருக்கும் தமிழ் நாட்டுக்கும் கேடு நினையாத பல்லாயிரக்கணக்கானோர், அந்த மாநாட்டுக்கு நிதி வழங்கினார்கள்!

நண்பா! தமிழ் மாநாட்டுக்காக, தமிழக அரசு, அறிஞர் அண்ணா அவர்களது முன்னிலையிலேயே நிதி திரட்டியது. திரட்டிய நிதியில் ஒன்பது இலட்சம் ரூபாய்களை மூன்று பல்கலைக்கழகங்களுக்கு திருக்குறள் ஆராய்ச்சிக்காகக் கொடுத்துதவியும் செய்தது எஞ்சிய தொகையை தமிழின் வளர்ச்சிக்கு என்று ஒதுக்கியது.

இந்த 1967-ல்தான் நண்பா, இப்போது இந்திரா காங்கிரசின் இடைக்காலத் தலைவராக இருக்கும் சுப்பிரமணியம், த. நா. கா. க வின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்!

காமராசர் தேர்தலுக்காகவென்று வசூலித்த தொகையில் ரூபாய் 60 லட்சம் வரையில் கணக்கு வேண்டும் என்று இப்போது எப்படிக் கேட்கிறாரோ, இதேபோல் தி. மு. க. அரசைப் பார்த்து, தமிழ் மாநாட்டு வசூல் கணக்கு எங்கே? எங்கே? என்று ஊருக்கும்போய் கேள்விமேல் கேள்விகளைப் போட்டு வைத்தார்!

கணக்கு விஷயத்தில் கழகம், எப்போதுமே கணக்காக இருக்கும் என்பதை, கணக்கு பற்றிய கணக்குகளை எப்போதுமே கண்டறியாத காங்கிரசார் கழகத்திடம் கணக்குக் கேட்டார்கள்!

சிரிக்கக் கூடாது நண்பா! 60 லட்சம் ரூபாய்களுக்குக் கணக்குக் காட்டவேண்டிய காங்கிரஸ், தமிழ் மாநாட்டுக் கணக்கை, ஒரு துருப்புச் சீட்டாகவே பயன்படுத்த நினைத்து குரலை உயர்த்திக் கொண்டது.

நண்பா, நம்முடைய தேர்தல் நிதி வசூல் பற்றிய கணக்கினை, நீதி மன்றம்கூட ஒரு கட்டத்தில் பரிசீலனை செய்திருக்கிறது.

நீயும் பார்த்திருக்கக் கூடும். செய்தி இதழ்களில் அடிக்கடி அரசியல் கட்சிகளுக்குக் கம்பெனிகள் நிதி உதவியளித்த கணக்குகள் கொடுக்கப்பட்டு பிரசுரிக்கப் பட்டிருப்பதை!

அவைகளிலிருந்து என்ன அறிந்துகொள்ளமுடிகிறது? ஒவ்வொரு தடவையும் பல இலட்சங்களை நிதியாய்ப் பெற்றுக் கொண்டு, பட்டியலின் தலைமை இடத்தைக் காங்கிரசுக் கட்சியே ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது என்பது புரிகிறதல்லவா! நிதியுதவி பெறுவதில், காங்கிரசுக் கட்சிக்கு ஈடாக இதுவரையில் இந்தியத்துணைக்கண்டத்தில் இன்னும் ஒரு கட்சி ஏற்படவில்லை, முண்டியடித்துக் கொண்டு இராஜாஜியின் சுதந்திராக் கட்சி இரண்டாமிடத்தைத்தான் பிடித்துக் கொண்டிருக்கிறதேயல்லாமல் காங்கிரசின் இடத்தைப் பறித்துக்கொள்ள இன்னமும் சுதந்திராவினால்கூட முடியவில்லை.

இதுவரையில் கோடி கோடியாக நிதி கேட்டுப் பெற்றுக் குவித்துக்கொண்டுள்ள காங்கிரசுக் கட்சியிடம், நிதி பற்றியக் கணக்குக் கேட்டவர்கள், யாரேனும் உண்டா? காங்கிரசுக் கட்சியிடம் ஒருவர் கணக்குக் காட்டு என்று கேட்டுவிடலாமா? கேட்டுவிட்டுத் தப்பித்துக்கொள்ள முடியுமா? ரஷ்ய நாட்டு ஸ்டாலினிடம்கூட யாராவது ஏதாவது கேட்டுவிட்டு

# சிவகாமி புலம்பல்



[இறந்த சிவகாமி அம்மாள் இருக்கின்ற காமராசரைப் பார்த்து—அவர் செயல் கண்டு வருந்திப் புலம்புவதாக அமைக்கப்பட்ட கவிதை]

விருது நகர்மண்ணில்
விளையாடி வந்தவனே!
கருமிபெனும் சண்டாளக்
காட்டில் புகுந்தாயே!
நாவற் பழமேனி
நாயகனே! மூலதனம்
ஏவுகிற ஏவலுக்கு
எடுபிடியாய் போனாயோ?
வீரம் விளையாடும்
வேதம் தவழ்ந்தோடும்
பாரதத்தைப் பாடுபடும்
பாட்டாளர் இந்தியத்தைச்
சுட்டுப் பொசுக்குதற்கா
தூக்கினாய் போர்க்கொடியை?
எட்டுக்கால் பூச்சிகளின்
இருள்வலையில் பட்டாயே!
முற்போக்கின் பேராலே
மூலை முடுக்கெல்லாம்
சொற்போர் புரிந்தாயே!
சொத்தையாய் போனாயே!
சோச லிசம்பேசி
சுற்றிவந்த கார்முகிலே!
காசு லிசவேசி
கால்வருடச் சென்றாயே

மீண்டிருக்கக்கூடும். சோவியத் கம்யூனிஸ்டு கட்சியின் பொலிட்பீரோவில்கூட கேள்விகளைக் கேட்டு விட்டு விளக்கம் பெற்றவர்கள் இருக்கக்கூடும். காங்கிரசிடம் கணக்குக் காட்டு என்று கேட்டவர்கள் இருக்க முடியும் என்றால், அது உலகமகா அதிசயங்களில் ஒன்று என்றுதான் ஒப்புக்கொள்ளவேண்டியிருக்கும்

1967-ல் தமிழ் மாநாட்டுக் கணக்கைக் காட்டு, காட்டு என்று கூறிய சுப்பிரமணியனாரை அடுத்து, கருத்திருமனார்கூட கூப்பாடு போட்டார்! ஏன், காமராசர்கூட அந்தக் கேள்வியை ஒரு கணையாக்கிக் கொள்ளப் படாதபாடுபட்டிருக்கிறார்.

கணவனின் கொடுமையைத் தாளமாட்டாது, பிறந்த வீடு சேர்ந்துவிட்ட மனைவி, பெற்றோரிடம் குறைபட்டுக்கொள்கிறாள். குற்றங்குறைகளை மிகைப் படுத்துகிறாள்.

"ஓர் தலைவன் காமராசன்
ஓர் நாடு பாரதமே
ஓர் கட்சி காங்கிரசே"
என்றெல்லாம் ஓர் கவிஞன்
இன்னிசையால் பாடியதைக்
கேட்டு மகிழ்ந்தேனே!
கீர்த்தியால் சொக்கினனே!
வேட்டுவைக்கும் வீணருடன்
கூட்டாகி நின்றாயே!

மதயானை போலேநீ
வளர்வாய் எனநினைந்தேன்
கரையானைப் போலாகிக்
கையால் பறந்தாயே!

என்னேடா செய்தாய்நீ
என்மகனே! கருமணியே!
உன்அவலம் என்காதில்
ஓங்கி ஒலிக்குதடா!

உள்ள பணக்காரன்
ஓதுகிற மந்திரத்தில்
உள்ளம் இழந்தாயா?
ஊனை வளர்த்தாயா?

பாட்டில் எனுங்குரங்கின்
பாட்டிகதைத் தத்துவத்தால்
தேட்டம் இழந்திந்தத்
தேசம் மறந்தாயா?

தேசாயூ எனும்நரியின்
சீழ்பிடித்த சிந்தனையைக்
கூசாமல் ஏற்றுக்
குரங்காட்டம் போடுறையே!

சிண்டிக் கேட்டென்னும்
திருட்டுக் கழுதையின்பின்
ஒண்டியாய் நின்று
உருப்படப் போகின்றாய்?

—புலவர் காய்கதிர், கோவை
(நன்றி: 'ஜனசக்தி')

ஆனால் சுப்பிரமணியத்தின் இப்போதைய குற்றச்சாட்டு—ரூ. 60 இலட்சத்துக்குக் கணக்கு இல்லை என்ற குற்றச்சாட்டு மிகையானது; அபத்தமானது; பழி சுமத்தும் நோக்கம் கொண்டது என்று காமராசர் கூறுவதிலே மிகை இருக்கிறதா? உண்மையாவது உண்டா?

60 லட்சம்கூட அல்லவாம்! 85 இலட்சங்களாம்! இப்போது அறிவித்திருக்கிறார், இன்னொருவர்! இண்டிகேட்டின் இடுக்கில் இருப்பவர்! கோசல்ராம் என்ற பெயரைக் கொண்டிருப்பவர்! அறுபது இலட்சமோ, 85 இலட்சமோ, உருளுக்குக் கணக்கு வேண்டும் என்கிறார், இடைக்காலக் காங்கிரசுத் தலைவர்!

சுப்பிரமணியம் காங்கிரசிடம் கணக்கே கேட்கவில்லை என்கிறார் காமராசர்! கணக்குக் காட்டப்பட்டது என்கிறார் அப்போதைய காங்கிரசுக்குப் பொறுப்பேற்றுக் கொண்டிருந்த கிருஷ்ணசாமி நாயுடு'!

தி மு க. அரசைப் பார்த்து, தமிழ் மாநாட்டுக் கணக்கு எங்கே, எங்கே என்று கேட்டுக்கொண்டிருந்த நேரம்தான் நண்பா, இந்தப் பிரச்னைக்குரிய நேரம், த. நா கா. க.வின் தலைவர் பொறுப்புக்கு வந்தவுடன், ஒருதலைவர் நியாயமாக நடந்துகொள்ளவேண்டிய விஷயம்தான் இது!

சுப்பிரமணியம், கணக்குக் கேட்கவில்லை—என்ற காமராசரின் குற்றச்சாட்டை உண்மையென ஒப்புவதா!

கணக்குக் கேட்கப்பட்டபோது, காமராசரின் தலையீடு இருந்தது; முழு விளக்கமும், போதிய விவரமும் தரப்படவில்லை என்ற சுப்பிரமணியத்தின் குற்றச்சாட்டை நம்புவதா? சுப்பிரமணியத்திடம், தேர்தல் கணக்குபற்றித் தனியாக விளக்கம் தரப்பட்டது என்ற கிருஷ்ணசாமி நாயுடுவின் அறிக்கையை நம்புவதா?

மாவட்டக் கலெக்டர்கள் வசூல் கணக்கு என்ன? பூம்புகார் விவரம் யாது? மாணவர்களிடம் விற்றுப் பெற்ற தொகை எவ்வளவு? பொதுமக்களது உதவி எந்த அளவுக்கு? என்றெல்லாம் கழகத்திடம் துருவித் துருவி கணக்குக் கேட்ட வேளையிலேயேதான், தனியாக அந்தக் கணக்குப் பிள்ளைக்கு விளக்கம் தரப்பட்டது என்கிறார் கிருஷ்ணசாமி நாயுடு.

காமராசரது குற்றச்சாட்டு. இன்று அவரது அணியிலேயே இருக்கின்ற கிருஷ்ணசாமி நாயுடுவால் மறுக்கப்படுகிறது என்றாகவில்லையா, நண்பா! சுப்பிரமணியம் கணக்குக் கேட்டார் என்பது உண்மை என்றாகவில்லையா?

"எண்" இயல்பற்றி எப்போதுமே எண்ணி அறியாத காமராசர், கணக்குப்பற்றி எண்ணி இருப்பார் என்பதுவும் ஏற்கமுடியாததுதான்! ரூபாய் 85 லட்சம்! பொதுமக்கள் நன்கொடையாக இருக்கமுடியாது. தேர்தலுக்கு முன்பு வசூலிக்கப்பட்ட தொகையாதலால் பல முதலாளிகள், ஆலை அரசர்கள், பணத்திமிங்கிலங்கள், தொழில் முதலைகள் ஆகியோரிடமிருந்து வழக்கம் போல் பெற்றுக்கொண்ட வாடிக்கையாகத்தானிக்க வேண்டும் அதுபோன்ற தொகைகளுக்குக் கணக்கு வைத்துக்கொள்ள காங்கிரசுக்கட்சியினால் முடியுமா? அல்லது மனைவி, வெளியே சென்று, இதுபோல மானத்தை வாங்கிவிடப் போகிறாள் என்று எப்போதாவது யாராவது அன்றைக்கு எண்ணிப் பார்த்திருக்க முடியுமா?

1967, இந்த துணைக்கண்டத்துக்கு இவ்வளவு பெரிய பூகம்பத்தை ஏற்படுத்திவிட்டது! 1967ல் இந்த அளவுக்கு பூகம்பம் ஏற்படவில்லையானால் நண்பா,

இன்று சிண்டிகேட், இண்டிகேட் என்றுகூட விரிசல் ஏற்பட்டிருக்காது என்று நம்பலாம்!

கணவன் மனைவி இவர்களுக்கிடையே ஏற்பட்ட வழக்கு, பாகப்பிரிவினைக்கும் வரும் என்கிற நிலையில் கணக்குகள் காட்டப்படத்தான் வேண்டும்.

1965ல் வசூல் செய்யப்பட்ட யுத்தநிதி, நேரில் அரசுக்குப் போய்ச்சேர்ந்த தொகை எவ்வளவு? தனியார் மூலம் வசூலிக்கப்பட்டது எவ்வளவு? காமராசர் மூலம் கிடைத்தது எவ்வளவு? காமராசர், எந்தெந்த ஊரில், யார்யாரிடம் எவ்வளவு தொகை பெற்ருர் என்பதற்கும், எந்தெந்த ஊரில், எந்தெந்த கூட்டங்களில் ரூபாய் நாணயமாகவும், பண ஓலையாகவும், நகை நட்டுக்களாகவும் பெற்ருர் என்பதற்கும் கணக்குக் கொடுத்தாக வேண்டும்! காங்கிரசுக்கட்சி முன்னின்று ஆடிய இந்த வேட்டையில், கிடைத்ததென்ன? என்பதற்கும் விளக்கம் தேவை, மக்கள் நீதிபதிகளாக அமர்ந்திருக்கும் நீதிமன்றத்துக்கு! மக்களுக்கு!

காமராசர் மட்டுமல்ல, காங்கிரஸ் மட்டுமல்ல—சுப்பிரமணியனும்கூட இந்தக் கணக்குக் காட்டக் கடமைப்பட்டிருக்கிருர்கள்! இந்திய அரசு வசூலித்தது—என்று "முக்காடு" போட்டுக்கொண்டுவிடக்கூடாது. தனியார் வசூலித்துக் கொடுத்திருக்கிருர்கள்! அரசு வசூலில், தனியார் தலையிட்டு நிதிபெற இடமிருக்க முடியாது. இடமிருந்ததென்ருல், கணக்குக் கேட்கவும் இடமுண்டு.

1965 வசூல் மட்டுமல்ல! 1967 முதல் 1969 வரையில் பெற்ற பல்வேறுபட்ட நிதிகளுக்கும் கணக்கு வேண்டும்! காங்கிரசுக்கட்சி, விளக்கம் தரக்கடமைப்பட்டிருக்கிறது.

1967 தேர்தல் கணக்குமட்டும்தான் பிரச்சினைக்குரியது என்று நழுவ நினைத்தால், குற்றவாளி சட்டத்தின் சந்துபொந்துகளைத் தேடுகிருன் என்ருகிவிடும்!

கணக்கு, கணக்கு என்று கதறியவர்கள், இன்றைக்குத் தன்னிடமே கணக்குக் கேட்கிருர்களே என்று, அங்கலாய்த்துப் பயனில்லை.

திராவிட முன்னேற்றக் கழகம், தன் கணக்கை, பல சந்தர்ப்பங்களில் மக்கள் மன்றத்தின் முன்பு வைத்திருக்கிறது.

ஒரு சந்தர்ப்பத்தில் பேரறிஞர் அண்ணு அவர்கள் காங்கிரசுத் தேர்தல் நிதிக்குக் கணக்குத் தேவை, என்று கேட்டது போல, இன்று அந்தக் கேள்விக்குப் புத்துயிர் ஏற்பட்டிருக்கிறது. புதிய பொலிவு உண்டாகி இருக்கிறது! அவசியமான நிலை என்றும் ஆகிவிட்டிருக்கிறது.

1972ம் ஆண்டு வெகு தூரத்திலில்லை. அந்த ஆண்டிலே, இந்தக் கணக்குகள் மக்கள் மன்றத்தின் முன்பு வைக்கப்படவேண்டும்! அதன் மீதே தீர்ப்புக்கள் கோரப்படவேண்டும்!

காமராசர் கூறுவதுபோல், கணவனேடு "உறவு" கொண்டிருந்த வேளையில் கணக்குக் கேட்கப்படவில்லையென்ருல்கூட உறவினை "அறுத்துக்" கொண்டு கேட்கிற இந்த நேரத்திலாவது, சரியான கணக்குக் கொடுத்துத்தான் தீரவேண்டும்.

மாருக, உறவுக்கு வரமறுத்துவிட்ட காரணத்தை வைத்துக்கொண்டு "மலிவான அறிவுரைகள்" வழங்க முன்வருவது விபரீதமான விளைவுகளைத் தந்துவிடக் கூடும்!

நண்பா, சுப்பிரமணியனர் கோபித்துக் கொண்டு போய்விட்ட ஆத்திரத்தில் இப்படிப் "புகார்" கூறத் தொடங்கி இருக்கிருர் என்று அங்கலாய்த்துக் கொள்கிருர் காமராசர்! இது சுப்பிரமணியத்திற்கு!! இதே காமராசர், ஆதாரமற்ற ஒழுக்க முறைக்கு மாறுன வகைகளில் கழகத்தின் மீது எத்தனை எத்தனை குற்றச்சாட்டுக்களையெல்லாம் எழுப்பி இருக்கிருர், கற்பனை செய்துகூட காணமுடியாத குற்றச்சாட்டுக்களையும் "புகார்"களையும் கூறியிருக்கிருர்.

தன் மீதே குற்றச்சாட்டு திரும்பும்போது, தணலாகிவிடுகிறது நெஞ்சம்! தாவிக்குதிக்கிருர்! ஒழுக்கம் பற்றியும், "பொறுப்புணர்வு" பற்றியும் ஓலமிடுகிருர்!

பாவம், பொல்லாத காலம், போருத வேளை காமராசருக்கு! சுப்பிரமணியம் கேட்ட கணக்கு, காங்கிரசுக் கட்சியின் கணக்கு!

நாம் கேட்டிருக்கும் கணக்கு, அரசும் தொடர்புடைய கணக்கு! காமராசரது கரத்திலேயே இருக்க வேண்டிய கணக்கு!

பொறுப்புணர்ச்சியுள்ள ஒழுக்கசீலர், இதற்காவது கணக்குக் காட்டட்டுமே!

மனைவியின் குற்றச்சாட்டுக்கள் மிகையானவை! ஆதாரமற்றவை என்று அப்போதுதானே தெளிவுபெற முடியும்?

காமராசருக்கு, கோடிக்கணக்கில் பாங்கியில் கணக்கு இருக்கிறது என்றுகூட சில ஆண்டுகளுக்கு முன்பு, இந்தியத் தலைநகரிலும், ஆந்திரத்து ஐதராபாத்திலும் "சுவரொட்டிகள்" குற்றஞ் சாட்டின!

அந்தக் குற்றச் சாட்டினை, இன்று வரையில் மறுத்தறியாத மறுக்க மறந்துவிட்ட காமராசரது, ஒழுக்கமும், பொறுப்புணர்ச்சியும், எப்படிப் பட்டதென்று இப்போது கேட்கப்படுகின்ற கணக்குக்கு "ஒழுங்கான" விளக்கம் கொடுக்கப்படும்போது, விளக்கம் கிடைத்துவிடக் கூடும்!

பாவம் காமராசர்! அவராவது கணக்குக் காட்டுவதாவது! அவர் ஏழைப் பங்காளர்! வரண்ட தலையினைக் கண்டு வாடுபவர்! ஒட்டிய வயிறினைப் பார்த்து ஓலமிடுபவர்! கட்டியிருக்கும் கந்தல்களைப் பார்த்து கதறியழுபவர்! இவைகளுக்கே நேரமற்றிப்பவர், கணக்குக் காட்ட நேரம் ஒதுக்கிக்கொள்ளமுடியுமா? முடியாதுதான்!

சுப்பிரமணியம் கணக்குக்கேட்கவில்லை—என்ற காமராசரது குற்றச் சாட்டை நம்பமுடியாது. ஏனென்ருல், தமிழ் மாநாடு கணக்குக்கேட்ட நேரத்தில் தலைவரானவர் சுப்பிரமணியம்!!

மே. வங்காள முதலமைச்சர், அஜாய்முகர்ஜியையே "போ, போ, வெளியே போ" என்று துரத்தியவர் சுப்பிரமணியத்தை, விழியாலேயே எரித்துவிட்டிருக்கக் கூடும்!

காமராசரிடம் கணக்குக் கேட்கப்பட்டிருக்க முடியும்! அது மறுக்கப்பட்டிருக்கவும் கூடும்!

இன்று மக்கள் மன்றத்தின் முன் மறைக்கப்படுவன எல்லாமே எல்லாக்காலத்திலும் மறைக்கப்பட்டுவிட முடியாது!

புதைக்கப்பட்ட உண்மைகள், ஒருநாளில் வெளி வந்துதான் தீரும்! உலகு உணர்ந்துகொள்ளத்தான் செய்யும்! அவ்வாறு உணர்ந்துகொள்ளவேண்டிய காலம்தான் 1972! வாழ்க அந்த ஆண்டு!

அன்புள்ள,

திருவாரூர் முத்துராமன்

# கேட்டீரா சேதி!

## அன்றுதான் அறிவு வரும்!

"தன் வருகை குறித்து சிங்கள அரசு அஞ்சுமானால், தன் இலங்கை விஜயத்தையே ரத்து செய்து விடுகிறேன்" என்று அமிருதசரசிலிருந்து தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் தெரிவித்திருந்ததானது மிக முக்கியமானதொரு நிகழ்ச்சியென்றே கருதத்தக்கதாகும். தி. மு. க. தலைவரின் வருகைபற்றி டட்லியின் அரசு, அஞ்சுகிறதோ இல்லையோ, அன்றிலிருந்து இன்று வரையில் திருமதி பண்டாரநாயகாவுக்கு மட்டும் அச்சம் நீங்க மறுக்கிறது. அவனியில், இவர் அஞ்சாத பொருளொன்றே இராதுபோலிருக்கிறது. நடைபெறவிருக்கும் இலங்கைப் பொதுத் தேர்தலோடு, தமிழக முதல்வரின் வருகையையும் இணைத்து ஓலமிடத் தொடங்கி இருக்கிறார். இவரது கருத்தை எடுத்து வைத்துக் கொண்டு சிலோன் டெய்லி நியூஸ் என்ற இதழும் ஓல மிட்டிருக்கிறது. திருமதி பண்டாவின் துணைநிற்கும் இந்த ஏட்டிடமிருந்து வேறெதனையும் எதிர்பார்க்கமுடியாது. தமிழக தி. மு. க.வுக்கும், இலங்கைத் தி.மு.க.வுக்கும் தொடர்பே இல்லையென்று அண்ணாவின் காலமுதலே அறிவிக்கப்பட்டுக் கொண்டு வந்தும் வீண்பீதியைக் கிளறி அரசியல் வாணிகம் புரிய பண்டாவின் கூட்டம் முனைவது வருந்தத்தக்கது. இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வெற்றிவாய்ப்புக்கள், உள்ளூர் நிலைமைகளையொட்டியதே ஒழிய, தாய்த் தமிழகத்திலிருந்து ஏற்றுமதிசெய்யப் படுவதல்ல என்பதனை உணரும் நாள்தான் சிங்களவெறியர் கூட்டத்துக்கு அறிவுத்தெளிவு ஏற்படும் நாளாகும்.

## விற்பனை செய்தார்களாம்!

பஞ்சாப் மாநிலத்திலுள்ள சண்டிகார் நகரில் நிறுவப் பெற்றுள்ள மத்திய விஞ்ஞானக் கருவிகள் நிறுவனத்தின் அலுவலகத்திலிருந்து ஒரு முக்கியமான கருவி தொடர்பான வடிவ அமைப்பு வரைப்படமொன்றுகாணாமற்போய் விட்டதாம்! மூன்றாண்டுகளுக்கு முன்பு, இந்திய அரசின் பாதுகாப்புத்துறை அமைச்சகம், இப்படத்தை, இந்த நிறுவனத்துக்கு அனுப்பிவைத்ததாம்! அந்த வடிவ அமைப்புப் படத்தைத்தான் "களவு" போய்விட்டதாக அந்நிறுவனத்தின் டைரக்டர் பி. எஸ். கில் என்பவர் அறிவித்திருக்கிறார், பீரங்கிப் படைக்குப் பயன் படக்கூடிய ஒரு கருவியின் வடிவமைப்பு, காணாமற்போயிருப்பது, அதிர்ச்சி தரக்கூடியதுதான்! இராணுவம் தொடர்பான விவகாரம் இது! இப்படம், அயல் நாடொன்றுக்கு அனுப்பப்பட்டிருக்கக்கூடும் என்றும் ஐயப்பாடு ஏற்பட்டிருக்கிறது. இச்செய்தி உண்மையானால், பாதுகாப்பு அமைச்சகம், சுறுசுறுப்போடு இயங்கித் தீரவேண்டும். இன்னும் என்னென்ன "இரகசியங்கள்" "விற்பனை" செய்யப்பட்டுள்ளன என்பதையும் கண்டுபிடிக்கவேண்டும்! விற்பனை செய்திருப்பதாகக் கருதப்படும் குற்றவாளிகளை மக்கள் மன்றத்துக்கு அறிமுகம் செய்து வைக்க வேண்டும்! இதற்கெல்லாம் நேரமும், ஓய்வும் இருக்குமோ?

## செயல்பட்டால் நல்லது!

தமிழ் நாட்டின் காவல்துறைக்கு, 110 வயதாகிவிட்டது. அதன் வாழ்நாளில், ஒரு அரசுத் தலைவர், காவல் துறையினரின் குறைபாடுகளை உணர்ந்து, அவற்றைக் களைய தீவிரமான நடவடிக்கைகளைய மேற்கொண்டு, வேண்டிய வசதிகளையும் செய்து தந்திருப்பவர் 1969-ம் ஆண்டைய தமிழக முதலமைச்சர் மாண்புமிகு கலைஞர் கருணாநிதி அவர்கள்தான் என்று பெருமிதத்தோடு கூறி பெருமகிழ்ச்சியடைந்திருக்கிறார் காவல்துறைத் துணைத் தலைமை அதிகாரி எஸ்.எம். டயஸ். இந்தப் பெருமிதத்தையும் மகிழ்ச்சியையும் முழுதுமாக, தமிழக அரசுக்குக் கிடைக்கச் செய்யவேண்டுவது காவல் துறையின் தலையாய கடமையாகும். காவல்துறை பற்றிப் பரவலான அதிருப்தி ஏற்பட்டுக் கொண்டு வருகிறது. சற்சில இடங்களில் ஆட்சித் துறைக்குக் களங்கமுண்டாக்கும் அளவுக்குக் கூட குற்றச்சாட்டுகள் மலிகின்றன. அனைத்து அங்கங்களும் சீராக இயங்கும்போதுமட்டும்தான் ஆட்சி இயந்திரம் ஒழுங்காக செயல்படமுடியும். பொறுப்பு மிகுந்த துறை காவல்துறை. தமிழகத்தின் காவல் துறைக்கு இந்தியத் துணைக்கண்டம் முழுவதுமே பாராட்டுக்களைக் குவித்துவைத்திருக்கிறது. அவ்வளவு சிறப்பிடம் வகிக்கும் இந்தத் துறை, மக்களின் ஒழுக்க மேம்பாட்டை வளர்க்கவும், பங்கப்படாமல் பாதுகாக்கவும் செயல்படவேண்டும். அரசு தன் கடமையைச் செய்கிறது. பயன் பெறுவோர் உரிய பலனை உரிய முறையில் செலுத்தவேண்டும்! செலுத்தத் தயக்கம் காட்டமாட்டார்கள் என்றும் நம்பலாம்!

## கண்டித்துவிட்டார் ஐயா!

அண்மையில், இந்திரா காங்கிரசின் இடைக்காலத் தலைவர் சுப்பிரமணியம் தமிழ் நாட்டில் சுற்றுப் பயணம் மேற்கொண்டபோது, திருச்சியில் விரும்பத்தகாத முறையில் சில வன்முறைச்செயல்களை, காமராஜ் காங்கிரசார் நடத்தி முடித்தார்கள்! அரசியலில்நிலவும் கருத்து வேறுபாடுகளைச் சந்திக்கும் முறை, வன்முறைதான் என்றால், வன்முறைக்குரிய அந்த அரசியல் கடையை முழுதுமாக மூடிவிட வேண்டியதுதான் பொறுப்புள்ளவர்களின் கடமையாகும். அராஜகங்களுக்கும், வன்முறைகளுக்கும் வித்திட்டவரே கர்மராசர்தான்! சுப்பிரமணியத்தை அடுத்து தமிழ்நாட்டில் காமராசரும் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவிருக்கிறார்! தான் வளர்த்த மாடுகள், தன்னையே பலி கேட்டுவிடக்கூடாது என்பதற்காகத்தானோ என்னவோ, திருச்சி வன்முறைகளைப்பற்றி காமராசர் கண்டனம் தெரிவித்திருக்கிறார்! காமராசர், வன்முறைகளுக்கு எதிராகக் கண்டனம்தெரிவிப்பதுஎன்பதுஉலக அதிசயங்களில் ஒன்று! எப்படியோ, கண்டித்து விட்டாரே—அதுவரையில் பாராட்ட வேண்டியதுதான்! ஆனால், அவர் பயணம் மேற்கொள்ளும்போது, எந்த அசம்பாவிதங்களையும் தோற்றுவிக்காமலிருந்தால்தான் சுப்பிரமணியம், தன் கண்ணியத்தை நிலை நாட்டிக் கொண்டவராவார்! எதிர்பார்க்கலாமா?

---

**சுதந்திரம்**

உண்மையான சுதந்திரம் என்பது நம் உரிமைகளை நாம் அனுபவிக்கும் உரிமையாகும்; பிறருடைய உரிமைகளை அழிப்பதன்று.

—பிங்கார்ட்

# குறையும் - நிறையும்

காஞ்சியில் இந்தப் பகுதி, கிழமை தோறும் தொடர்ந்து வெளிவரும். மிகுதிக்கண் இடித்தல் என்றகுறட்பா இயல்புப்படி இவற்றைப் பிரசுரிக்கிறோம். கடிதங்கள், சுருக்கமாக, தெளிவாக, காகிதத்தின் ஒரே பக்கத்தில் முழு முகவரியுடன் எழுதப்பட வேண்டும். கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

"குறையும் நிறையும்" பகுதி
"காஞ்சி"
86, திருக்கச்சிநம்பித் தெரு,
காஞ்சிபுரம்-3.

ஆசிரியர் அவர்களுக்கு,

காங்கிரசுக் கட்சியின் இப்போதைய நிலை, நம் நாட்டிலுள்ள எல்லா அரசியல் கட்சிகளுக்குமே ஒரு சிறந்த படிப்பினையைத் தரக்கூடியதாகும். இந்திய சுதந்திரப் போராட்டத்தில், காங்கிரசுக் கட்சியின் பங்கு, கணிசமான அளவு கொண்டது என்பதை யாரும்மறுக்க முடியாது. எனினும் பேருக்கும் புகழுக்கும் அதுபடும் பாட்டைப் பார்க்கும்போது சுதந்திரப் போராட்டம் கூட பேருக்காகவும் புகழுக்காகவும் தான் மேற்கொண்டனரோ என்று எண்ணத்தோன்றுகிறது. ஆனால் காந்தியடிகள், நேருபிரான் போன்றோர் காலத்தில் புகைச்சல்கள் இருந்தனவேயொழிய விரிசல் எதுவும் காணப்படவில்லை. இப்போது நாடாள்வோர், போகிற போக்கையும் நாடாள்வோரை எதிர்ப்போரது போக்கையும் ஒரு சேரப்பார்க்கும்போது, தியாக மனப்பான்மைக்கு இடமிருப்பதாக ஒப்புக்கொள்ள முடியவில்லை. எந்த அரசியல் கட்சியாயினும், தன் தொண்டர்களையும் ஊழியர்களையும் புறக்கணித்து விட்டு. ஒரு சில தலைவர்களாக வளர்ந்தவர்களாலேயே, செயல்பட்டுவிட முடியாது என்ற பாடத்தைத்தான் காங்கிரசிடமிருந்து. நாமும், மற்ற மற்றக் கட்சிகளும் பெற்றாகவேண்டும். தலைவர்கள் வழி காட்டுவார்களா?

பி. புன்னபசவப்பா'
பெங்களூர்.

'காஞ்சி' ஆசிரியர் அவர்களுக்கு,

சென்னை நகரத்தில் ஓடிக்கொண்டிருக்கும், தமிழக அரசின் பஸ்களில் பணியாற்றிக் கொண்டிருக்கும் ஊழியர்களில் மிகப் பலர், வண்டியோட்டிக் கொண்டிருக்கும்போதே, அரசுக்கெதிரான பிரசாரங்களில் ஈடுபட்டு வருவது, நம் அரசின் கவனத்துக்குக்கொண்டு வரப்படவில்லையென்றே நம்புகிறேன். பஸ்களில் பயணம் செய்வோர் அனைவருமே கம்யூனிஸ்டுகளாக இருக்க வேண்டும் என்று அந்த நண்பர்கள் நினைப்பார்கள் போலிருக்கிறது. சென்ற வாரம், ஆயிரம் விளக்கில் பஸ் ஏறி, பாரிசுக்கு டிக்கெட் கேட்டேன்; டிக்கெட் எவ்வளவு? என்று தான்கேட்டேன்; பிரசாரம் தொங்கிவிட்டது! "ஏன் உங்கள் ஆதித்தனார் இதையெல்லாம் உங்களுக்கு சொல்லவில்லையா? மூனுபடி அரிசி போடுபவர்கள் ஆயிற்றே. அதற்குத்தானே அவர்களுக்கு நேரமிருக்கும், இருபது காசு கொடு" என்றாரே பார்க்கலாம்! நான் ஏதாவது எதிர்த்துப் பேசியிருந்தால், வண்டியை அங்கேயே நிறுத்திவிடுவாரோ, மற்றவர்கள் எல்லாம் கூடி ஸ்டிரைக் நோட்டீஸ் கொடுத்து விடுவார்களோ என்றெண்ணி, காசைமட்டும் கொடுத்தேன். ஒரு ஸ்டாப்பிங்கைக் கடந்திருக்கும்; டி. வி. எஸ். என்று நினைக்கிறேன். சிலபேர் இறங்கினார்கள். வயதானஒருவர் இறங்கத்தாமதமாகிவிட்டது. அவ்வவவுதான்! பிரசாரம் தொங்கிவிட்டார் டிரைவர்! "மக்கள் அரசு ஆச்சே ஐயா, ஒரு லிப்ட் ஏற்பாடு செய்யச் சொல்லி யாராவது ரெகமண்ட் செய்யக் கூடாதா? நம்பூதிரிபாடு வரணும் இங்கே சீப்மினிஸ்டரா" என்றார். பஸ் புறப்பட்டது. பாரிஸ் செல்வதற்குள் பலப்பல! எழுதக் கூடமனம் வரவில்லை. பயணிகள் தான் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்வோம்—பக்கத்தில் கண்டக்டர் வருகிறாரா என்று பார்த்து! ஒரு நாள், ஒரு ரூட்டில்தான் எனக்கு இப்படிப்பட்ட அனுபவம் ஏற்பட்டது. காசு கொஞ்சம் செலவானாலும், மரியாதையைக் காப்பாற்றிக் கொள்ள டாக்சியில் போகிறேன். சந்தர்ப்பங்களில் நடக்கவும் செய்கிறேன். இந்த துர்ப்பாக்கியம் நீங்குமா?

இரெ. விசுவநாதன்,
சென்னை.

ஐயா,

காஞ்சிபுரத்தில் கொசுவைவிட, பருத்திச் சூதாட்டம் அதிகம் பரவியிருப்பது பற்றி மூன்று வாரத்திற்கு முன்பு 'காஞ்சி'யில் அன்பர் ஒருவர் குறிப்பிட்டிருந்தார் நானும்அதுபற்றி தான் தெரிவிக்க விரும்புகிறேன். மதுக்குடியையும் மது விற்போரையும் பிடிப்பதில்கூட போலீசுத் துறைக்கு ஆபத்திருக்கிறது என்பதை ஒப்புக்கொள்ள முடியும். ஆனால் பருத்திச் சூதாட்டக்காரர்களைப் பிடிப்பதிலே என்ன ஆபத்து ஏற்படுமென கருதிவிலகி இருக்கிறார்கள் என்பதனைப் புரிந்துகொள்ள முடியவில்லை. பருத்திச் சூதாட்ட ஏஜெண்டுகள் போலீசுக்குக் "காணிக்கை" கொடுத்துவிடுவதாகப் பரவலாகப் பேசிக்கொள்ளப்படுகிறது. இது உண்மையாக இருக்குமோ என்றே எண்ணத்தோன்றுகிறது. நிலைமைகளைப் பார்க்கும்போது குடியினால் கெடும் குடிகளைவிட, இச்சூதாட்டத்தால் கெடும் குடிகளின் அளவு அதிகமாகவே இருக்கும் என்று நம்புகிறேன். போலீசுத் துறையினரும், அரசியல்வாதிகளும் இதில் உடனடியாகக் கவனம் செலுத்தவேண்டும் என்று விரும்புகிறேன்.

கே. ஏகாம்பரம்,
காஞ்சிபுரம்.

அன்புள்ள ஆசிரியருக்கு.

மாணவர்களுக்கிடையே, சில அரசியல் விஷமிகள் புகுந்து, விரும்பத்தகாத சில விளைவுகளுக்குக் காரணகர்த்தராயிருப்பதனை வன்மையாகக் கண்டித்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அண்மையில் பேசி இருப்பது பாராட்டுக்குரியதாகும். மாணவன் என்ற முறையில் நான் இது பற்றி என் சில கருத்துக்களைக் கூறலாமென நினைக்கிறேன். மாணவர்களுக்கு ஏற்படுகின்ற பெரும்பாலான பிரச்னைகள், கல்லூரி அல்லது பள்ளிக்கூடக் கட்டிடத்துக்குள்ளேயே தீர்க்கப்பட முடியும் நிலைமையிலிருந்தும், கட்சிகளின் பேரால் மாணவர் அமைப்புக்கள் இயங்கிக்கொண்டிருப்பதன் காரணமாக, அவை அரசியல் பிரச்னை போலாகி பெரிது படுத்தப்பட்டு படிப்பு நிறுத்தம் முதலான விரும்பத்தகாத போக்குக்கு உட்படுத்திவிடுகிறது, சில குறும்புத்தனமான அல்லது பர

(13-ம் பக்கம் பார்க்க)

# வினா-விடை

**சி. கமலநாதன், திருப்பூர்**

மாணவர்களுக்கு அரசியல் கூடாது என்பது 'காஞ்சி'யின் கருத்தா?

இல்லை. பேரறிஞர் அண்ணு அவர்களின் கருத்தே இது தான்! மாணவர்கள் அரசியல் பற்றி அறிந்துகொள்ள வேண்டும்; நேரடியாக அதில் ஈடுபடக் கூடாது — என்பதனை, வாய்ப்புக் கிடைத்த போதெல்லாம் எடுத்துக் காட்டி வந்திருக்கிருர்களே. மறந்துவிட்டீர்களா?

**எஸ். சுந்தரராசன், அம்பை.**

பாவினங்களுள் சிறந்தது 'வெண்பா' என்று கூறப்படுவது எதனுல்?

அது 'உயர்ந்த சாதி'யினரைப் பாடப் பயன்படுத்தப்படவேண்டும் என்பதாலும், "கலப்படமற்ற" "தூய" பாவிலக்கணங் கொண்டிருப்பதாலுமாம்!

**கே. சந்திரா, காஞ்சிபுரம்:**

இந்தியத்துணைக்கண்டம் வெளிநாடுகளுக்கு, முத்து, ரத்தினம் போன்ற நவரத்தினங்களை ஏற்றுமதி செய்கிறதா?

பல்லாண்டுக் காலமாகவே, இந்தப் பழக்கம் இந்தியத் துணைக் கண்டத்துக்கு உண்டே. அர்மா 1969-ல் கூட, 21 கோடி ருபாய்க்கு மேல் ஏற்றுமதி செய்திருக்கிறதே!

**எஸ். சங்கரன், விளாகம்.**

முகையூர் தொகுதி இந்திரா ஆதரவு வாக்காளர்கள், காங்கிரசுக்கு வாக்களிக்கலாமா?

காமராஜ் ஆதரவு வேட்பாளருக்கு, இந்திரா ஆதரவு வாக்காளர்கள் வாக்களிப்பதன் மூலம், காமராசரின் ஆதரவைப் பெருக்கிக்காட்டும் முட்டாள் தனத்தைச் செய்ய மாட்டார்கள் என்று நம்பலாம்.

**சி. ஏ. பொன்னுசாமி, சிதம்பரம்**

1967-ல் ஒன்பது மாநிலங்களில் காங்கிரசுக்கட்சி தோற்ற போது, அனைத்திந்தியக் காங்கிரசுக் கட்சியின் தலைவர் யார்?

சர்வவல்லமை பொருந்திய— ஜனநாயக சோஷலிசப் பிதாவான, காலாகாந்தி காமராசர் தான்!

**ஜி. கந்தவேல், சென்னை**

வெளிநாடுகளில் இந்திய சர்க்கரையின் விலை என்ன?

இந்திய சர்க்கரையின் சர்வதேச விலை, டன் ஒன்றுக்கு ரூ. 615 மட்டுமே என்று தெரிகிறது. இந்திய ஆலை விலை என்ன தெரியுமோ? ரூ. 1418 முதல் 1752 வரையில்!

**எஸ். சுப்பிரமணியம், சென்னை**

வாழ்க்கை எப்படிப்பட்டதாக இருக்கவேண்டும்?

விருப்பம்போல் செயல்படுவதாக இருக்கக்கூடாது; செயல்படுவதில் விருப்பமுடையதாக இருக்கவேண்டும்!

**ஆர். மணவாளன். ஆற்காடு**

மேற்குவங்க முதலமைச்சர் அஜாய்முகர்ஜி தெரிவிக்கின்ற தகவல் மிகவும் வருத்தமடையக்கூடியனவாக இருக்கிறதே, அவர் ஏன் பதவியைவிட்டு விலகிவிடக்கூடாது!

ஒரு நிமிடத்தில் பதவி விலகல் கடிதத்தை ஆளுநருக்கு அனுப்பிவிட முடியும். ஆனுல், எத்தனைக்கோடி செலவு செய்து மறுதேர்தல் நடத்த வேண்டும் தெரியுமா? அதுவும் இரண்டாண்டுக் காலத்துக்காக! பதவியிலிருந்து கொண்டே கம்யூனிஸ்டுகளைத் திருத்த முடியாதா என்று நினைக்கிருர்! பரிதாபத்துக்குரியவர்தான்! ஏனென்ருல் இடதுசாரிகளிடம் சிக்கியிருக்கிருரல்லவா!

**எம். தென்னவன், கோவை.**

சுதந்திராக் கட்சியும், காங்கிரசும் இணைந்துவிடும் வாய்ப்புண்டா?

1972 தேர்தலின்போது, இவை இரண்டு மட்டுமல்ல, பி. சோ. ச. சோ, ஜனசங் இவையெல்லாம் தேர்தலில் இணைந்து நிற்கும் வாய்ப்புண்டு!

**கே. பாலன், சென்னை.**

ஆண்கள் அழுவது கோழைத் தனம் என்று கூறப்படுவது சரியா?

அழுதுத் தொலைக்க வேண்டிய நிலையேற்பட்டால், ஆணுக இருந்தால் என்ன? பெண்ணுக இருந்தால் என்ன? ஆண்கள் அழுவது கோழைத்தனமென்ருல், பெண்களுக்கு மட்டும் அது பொருந்தாதோ? அழுவதன் மூலம் கண்ணீர் வெளிப்படுவதனுல், கண்களில் உள்ள அழுக்கு அகற்றப்பட்டு, தூய்மையாகிறது என்கிருர்களே! எல்லோருமே ஒரு நாளைக்கு இத்தனை நேரம் "அழுவதற்கென்று" ஒதுக்கிக் கொள்வது நல்லது அல்லவா!

★

12-ம் பக்கத் தொடர்ச்சி

பரப்பு மிகுந்த யாரோ சிலரால் விளைவிக்கப்படுகின்ற விவகாரங்கள் எல்லாப் பகுதி மாணவர்களையும் சரியாகவோ தவருகவோ ஈடுபடுத்திவிட்டுவிடுகிறது. ஆகவே, முதலமைச்சர் கலைஞர் கருணுநிதி அவர்கள் மாணவர்களுக்கிடையே அரசியல் கட்சிகள் செல்வாக்குப் பெறுவதை, எந்த நடைமுறையிலாவது தடுத்து நிறுத்த முன் முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும். இவை முழுவதுமாகத் தடுத்து நிறுத்தப்படாத வரையில், யாரோ சிலரின் விஷமத்தனத்துக்கு, பெரும்பான்மைமாணவர்கள் பலியாவதைத் தடுக்க முடியாது,

எம். ஜனுர்த்தனம்,
சென்னை.

முகப்பில்:

மின்துறை அமைச்சர் மாண்புமிகு ஓ. பி. இராமன் அவர்களுக்கும் செந்தில்வடிவுக்கும் 5-12-69ல் திண்டுக்கல்லில் நடைபெற்ற திருமணத்தில் ஒரு காட்சி.

2-ம் பக்கத் தொடர்ச்சி

ரூபாய்; இதைக்கொண்டு மகனின் நோய்க்கு மருந்து வாங்குவதா?

எல்லோருடைய வயிற்றுக்கும் மருந்து வாங்குவதா?

ரங்கனின் உள்ளம் அழுதது.

இன்றைக்காவது பத்து ரூபாய் கிடைத்திருந்தால்...?

'ஐயோ கடவுளே!!'

பணத்தை வைப்பதற்காகச் சவாரி செய்வோர் உட்காரும் சீட்டைத் தூக்கினான் ரங்கன்.

கடவுள் கண் திறந்து பார்த்து விட்டாரே!!

ஒரு மணிபர்ஸ் கீழே விழுந்தது.

'பர்ஸை' எடுத்த ரங்கனின் பார்வை விழுப்புரம் என்ற சொல்லின் மேல்பட்டது.

பொருளுக்கு உடையவர் யார் என்று புரிந்துவிட்டது.

'இதன் உள்ளே அஞ்சோ, பத்தோகூடவா இருக்காது?'

இந்த மெல்லிய சப்தம் ரங்கனின் உள்ளத்தில் எந்த மூலையில் இருந்தோ எழுந்தது.

அவ்வளவுதான்!!

'ஒரே மகன்; உயிர் பிழைக்க வேண்டாமா? கடவுளின் கருணை தான் இது!' இப்படியொரு ஈனக் குரல் எழுவதற்கும், 'அண்ணே! அண்ணே! வந்துபாரேன் உன் மவனை; கோணை கோணையாய் இழுக்குது' என்று ஓடிவந்து ஒருத்தி சொல்வதற்கும் சரியாக இருந்தது.

'ஐயய்யோ!!' ரங்கனின் குரல் பலபேரைத் திடுக்கிடச் செய்தது.

மகனுக்கு ஏற்பட்ட நிலையை நினைத்தா, மனதிற்கு ஏற்பட்ட குறையை நினைத்தா ரங்கன் துடித்தது?

'டேடேய் ரங்கன் போற வேகத்தைப் பாத்தியா?' யாரோ ஒருவன் சிரித்தான்.

'டர்...ர்...க்'

அந்த ரயில்வே ஸ்டேஷனில் போய்தான் ரங்கன் 'சடன்பிரேக்' போட்டான்.

நல்லவேளை!!

எதிரே வந்த லாரியுடன் மோதிக் கொள்ளாமல் இருக்கத்தான் 'சடன் பிரேக்' போட்டான் ரங்கன்.

அங்கும் கூட்டம் அதிகமாகத் தான் இருந்தது.

'அப்பா...!!' ரங்கன்விட்ட அந்த மூச்சில் உலக அமைதியே நிறைந்திருந்தது.

'யார் செய்த புண்ணியமோ, இன்னும் ரயில் வரவில்லை' என்று சொல்லிக்கொண்டே வண்டியை விட்டுவிட்டு, ஸ்டேஷன் உள்ளே ஓடினான் ரங்கன்.

'இந்தாங்க உங்க மணிபர்சு' என்ற ரங்கன் கொடுத்த பிறகுதான் அந்த ஆள்—ரங்கனின் வண்டியில் வந்தானே அந்தஆள், தன் பேண்ட் பையைப் பார்த்தான்.

'நல்லவேளை என் கண்ணிலே பட்டுது. இல்லேன்னா இந்தப் பணமில்லாம என்ன கஷ்டப்பட்டு இருப்பீங்களோ?'

அந்த ஆளுக்கு 'குப்' என்று வியர்த்துக் கொட்டியது.

'இதிலே இருக்கிற பணம். ஊரா முட்டுப் பணமா இருந்து. இப்படித் தொலைஞ்சி இருந்தா, உங்க மனசு என்ன பாடுபட்டிருக்கும்? வீணா நீங்க கடன்காரனாயில்லே ஆகி இருப்பீங்க!

உங்க காசு உழைச்சகாசுங்க; அதான் திருப்பிக் கெடச்சிடுச்சு'.

அந்த ஆளுக்கு என்ன பேசுவதென்றே தெரியவில்லை. அவனுடைய உள்ளத்தில், வெற்றிக்களிப்பில் மிதந்திருந்த ஆசைப்பிசாசு, மனச்சாட்சியின் முன்னே மண்டியிட்டது.

ஆம்! தோற்று, காலம் வரும் வரை காத்திருப்போம் என்றிருந்த அவனுடைய மனச்சாட்சியின் தாக்குதலைச் சமாளிக்க முடியாத, ஆசைப்பிசாசு என்னை விட்டுவிடு, என்னை விட்டுவிடு என்று ஓலமிட்டது.

ஒருமுறை தன்னைப் பார்த்துக் கொண்டான். டெரிலின் சர்ட், டுவீட் பேண்டுமாக, 'பையன் நல்ல அழகுப்பா' என்று ஊரே புகழும்படியாக இருந்த அவன் உடல் கூனிக் குறுகியது.

அழுக்குத் துணியும், வியர்வையால் நாற்றமெடுத்த உடம்புமாகக் காட்சியளித்த ரங்கன், கோயில் கோபுரமாகக் காட்சியளித்தான்.

'ரங்கா! என்னைக் கொஞ்சம் அர்பன் பேங்கிற்கு அழைத்துப்போ; என்ன ஏதுன்னு கேட்காதே; சீக்கிரம் போ'.

பேங்கு பிரளயமாகக்காட்சியளித்தது. வளர்ந்த உடல் குறுகி, நாமமும் நெற்றியுமாகக் காட்சியளித்த பியூன் அரிராமன், 'முப்பது வருஷமா உழைச்சவனை ஏமாட்டி செய் திருப்பான்' என்ற செல்வக்குறியுடன் நின்றிருந்த பேங்க் செகரட்டரி சீனிவாசன், 'என்ன ஆகுமோ' என்று பயந்திருந்த கேஷியர் எல்லாருமே மகுழ்ம்பியிருந்தார்கள்.

'சார்' என்று குரல் கொடுத்துக் கொண்டே நுழைந்த அந்த ஆளை 'வாங்க மணியம்' என்று வரவேற்றார் சீனுவாசன்.

'கேஷியர் கொடுத்த ரூபாயில் ரெண்டாயிர ரூபாய் அதிகமா இருந்தது. ஸ்டேஷன் போயிதான் எண்ணிப் பார்த்தேன், ....மணியம் முடிக்கவில்லை.

அங்கிருந்தவர்களின் முகமெல்லாம் மலர்ந்தது!

'ஐயா இந்த ஆபத்திலே இருந்து என்னைக் காப்பாத்தினீங்க. எல்லாம் அந்த ரங்கநாதப்பெருமாளின் புண்ணியமுங்க' பியூன் அரிராமன் பைத்தியம்போல் ஏதேதோ பிதற்றினார்.

'ஆமாங்க! அந்த ரங்கந் தாங்க உங்களைக் காப்பாத்தினான்; உங்களை மட்டுமா? என்னையும் காப்பாத்தினான்!'

மணியத்தின் கண்களுக்கு ரங்கன் தான் கடவுளாகத் தெரிந்தான்.

அந்த ரங்கனோ...

தன் மகனின் நினைவு அப்போது தான் ரங்கனுக்கு வந்தது.

'ஐயோ! என் மகனுக்கு என்ன ஆச்சோ'

மணியமும் பியூன் அரிராமனும் வெளியே வந்தார்கள்.

'நான் வரேனுங்க! என்று சொல்லிவிட்டு, வண்டியை அங்கேயேவிட்டுவிட்டு வேகமாக ஓடிய ரங்கன் திரும்பி வந்தான்.

'ஏனுங்க, கூலி கொடுக்க மறந்துட்டீங்களே; முக்கால்ருபா கொடுங்க; உழைச்சதுக்குக் கூலி வாங்காம, உங்களை ஏன் பாவத்துக்கு உள்ளாக்கணும்?'

ரங்கன் தான் கொடுத்த முக்கால் ரூபாயை இறைவனுக்குப் பக்தன் கொடுக்கும் காணிக்கையாகவே நினைத்தான்.

அதோ!!

அந்தத் திருப்பத்தில் திரும்புகிறான் ரங்கன்.

அவன் மகனின் கதி...? அந்த தெய்வத்தின் பிள்ளையின் கதி?

பண்பால் தெய்வமான அந்த ரிக்ஷாக்கார ரங்கனையே பக்தனாகக் கொண்ட கோயில் தெய்வத்திற்குத் தான் தெரியும்!!

ஆம்!!

கடவுளுக்குத்தான் தெரியும்!!

★

# முயன்றால்  முடியும்!

அமிர்தசரசிலுள்ள பல குருத்துவார்களுக்கும் நான் சென்றிருந்தேன்; அங்கெல்லாம் நான் கண்ட காட்சி என்னுடைய உள்ளத்தைப் புளகாங்கிதமடையச் செய்தது.

தங்கக் கோயிலிலே, இதுதான் விருந்து மண்டபம்-சமையற்கூடம் என்று சொல்லி என்னை அழைத்துச் சென்றார்கள்; அங்கே மிகப்பெரிய அடுப்பு ஒன்று காளவாய்போல் எரிந்து கொண்டிருந்தது; அடுப்பு ஏற்பட்டதிலிருந்து அணைக்கப்படவேயில்லை என்று சொன்னார்கள்!

அதுமாத்திரமல்ல; நன்கொடையாளர்கள், கோதுமையானாலும்—வேறு உணவுத் தானியமானாலும்—எரிக்கவேண்டிய விறகுக் கட்டைகளானாலும்—எண்ணெய் ஆனாலும்—பலகாரம் செய்வதற்கு வேறு பண்டங்களானாலும்—அனைத்தையும் தங்கு தடையில்லாமல் கொடுத்துக்கொண்டே இருக்கிறார்கள்.

அதைப்போலவே, பல்வேறு வேலைகளில் ஈடுபடுகின்ற உழைப்பைத் தரக்கூடிய பலரும் அலுவல் முடிந்த பிறகு தாங்களாகவே வலிய அந்தக் குருத்துவாரத்திலுள்ள சமையற்கட்டிற்கு வந்து—பல்வேறு வேலைகளில் அவர்களே ஈடுபட்டு—சமையல் காரியங்களைக் கவனிக்கிறார்கள்!

ஒவ்வொரு தடவையும் ஏறத்தாழ அரைமணி நேரத்திற்கு ஒருமுறை 3,000 பேர் அந்த விருந்து மண்டபத்திற்குள் நுழைகிறார்கள்; அவர்கள் எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி—எங்கிருந்து வருவோர்களாக இருந்தாலும் சரி—தடைபடுத்தப்படாமல் உள்ளே அனுமதிக்கப்படுகின்றனர்.

வந்து அமர்ந்ததும் அவர்களுக்கு, மலைபோல் அடுக்கி வைக்கப் பட்டிருக்கின்ற கோதுமை ரொட்டிகள் பரிமாறப்படுகின்றன; அதற்குத் தேவையான துணை பதார்த்தங்களும் பரிமாறப்படுகின்றன!

அவர்கள், போதும்—போதும்' என்று சொல்லும் அளவுக்குப் பசியாற... வயிறுற உணவு பரிமாறப்படுகிறது; அதற்குப் பிறகு அவர்கள் பந்தி முடிந்து எழுந்து செல்கிறார்கள்; அடுத்த பந்தி ஆரம்பமாகிறது; அதிலேயும் முதலில் சாப்பிட்டவர்கள் வந்தாலும் யாரும் தடுப்பதில்லை; இப்படி அரைமணி நேரத்திற்கு ஒரு முறை 24 மணி நேரமும் விருந்து நடந்து கொண்டே இருக்கிறது; அதற்கு ஓய்வே இல்லை—ஒழிவே இல்லை' என்று குறிப்பிட்டார்கள்.

யாரிடத்திலும் அவர்கள் காசு பெறுவதில்லை; அங்கே வலுவில் நன்கொடையாளர்கள் நன்கொடை தருகிறார்கள்; சிரமதானம் செய்கிறவர்கள் தாங்களே வலியவந்து சிரமதானம் செய்கிறார்கள். அதைப்போல், விருந்தினர்களும்வலுவிலே வந்து கொண்டிருக்கிறார்கள்; இப்படி நாள்தோறும் இடை விடாமல் பந்தி நடைபெற்றுக் கொண்டே இருக்கிறது.

இதைக் கண்ட நேரத்தில் தமிழ் நாட்டிலே இருக்கின்ற எல்லா ஆலயங்களிலும் இது நடைபெறாவிட்டாலும், எங்காவது ஒரு ஆலயத்திலாவது பரீட்சார்த்தமாக இதை நடத்திப் பார்த்தால் எப்படி இருக்கும்' என்ற எண்ணந்தான் எனக்கு ஏற்பட்டது. ஆனால், தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் அது முடிகிற காரியமா என்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டும்.

"ஏனென்றால், சீக்கிய மதத்தில் பிச்சைக்காரர்களே கிடையாது அப்படி இல்லாமல் இருப்பதற்கு முக்கியமான காரணம். வேலை செய்யமுடியாமல்தொல்லைப்படுகின்றஅகதிகளுக்கெல்லாம் வாழ்வளிக்கின்ற குருத்துவாரங்கள் இருக்கின்றன; அவைகளை நம்பி அவர்கள் இருக்கின்றார்கள்; வேலை செய்ய முடிந்தவர்கள் பிச்சை எடுப்பதில்லை—எப்படியாவது உழைத்துச் சம்பாதிக்கின்றார்கள்; அப்படிப்பட்ட சூழ்நிலை பஞ்சாப் மாநிலத்தில்—அதுவும் சீக்கிய மதத்தில் முடிகின்ற காரியமாக இருக்கிறது.

இங்கே நம்முடைய தமிழ் நாட்டில் பரீட்சார்த்தமாக இதை நடத்த முடியுமா என்பதை அறநிலைய அமைச்சர் அவர்களும், ஆணையர் அவர்களும், ஆலயங்களிலே தொடர்பும் பொறுப்பும் வாய்ந்த நிறுவனத்தாரும் சிந்தித்துப் பார்க்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். நிச்சயமாக நிறைவேற்ற வேண்டும்' என்று அறுதியிட்டுக் கூற முடியாது; ஏனென்றால் அந்தச் சூழ்நிலை வேறு—இங்கே வேறு.

இலட்சக்கணக்கான ஏக்கர் நிலங்களைத் தன்னகத்தே கொண்டுள்ள நம்முடைய ஆலயங்களுடைய சொத்துக்கள்—இன்னும் இன்று நன்கொடை வழங்கியுள்ள பிர்லா போன்றவர்களின் நன்கொடைகளினால் இதுபோன்ற காரியங்களிலே நிச்சயம் ஈடுபட முடியும்; ஆகவே இதுபற்றி யோசிக்க வேண்டும் என்று சம்பந்தப்பட்டவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

—மதுரை மீனாட்சியம்மன் கோயில் தங்குவோர்
விடுதி அடிக்கல் நாட்டுவிழாவில் முதலமைச்சர்
கலைஞர் மு. கருணாநிதி.

3-ம் பக்கத் தொடர்ச்சி

உபதேசிக்க வந்திருக்கிறார்! பாவம்! பித்த மிகுதி! சித்தக் கலக்கம்! பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியபடி, மன்னிப்போம்—மறப்போம்!

## வாழ்க நிதியமைச்சர்!

கலைஞர் கருணாநிதி அவர்களது அமைச்சரவையில், நிதியமைச்சராகப் பொறுப்புவகிக்கும் மதியழகன் அவர்களைப்பற்றி நாட்டுக்குப் புதிய அறிமுகம் தேவையில்லை. பேரறிஞர் அண்ணா அவர்களாலேயே, உணவுத் துறையை ஒதுக்கிக் கொடுக்கப்பட்டவர் என்றாலே போதும், மதியழகன் அவர்களது ஆற்றலைப் புரிந்து கொள்ள முடியும்!

கடந்த இருபத்தைந்து ஆண்டுக் காலத்துக்கு மேலாகவே, தம் மாணவப்பருவத்திலிருந்து கழகத்திற்கும், அதன் மூலம் மக்களுக்கும் தொண்டாற்றிய மதிப்புமிக்க ஒரு முன்னணித் தலைவர் அவர்.

சென்றகிழமை மதியழகன் அவர்களது 44ம் பிறந்த நாள் விழா, மிகக் கோலாகலத்துடன் கொண்டாடப் பெற்றிருக்கிறது. பிறந்தநாள் பெருமை பெற்றது என்றால், அவரது சேவையும், தொண்டும் பெருமை பெற்றது என்றே பொருளாகும். இந்த விழா, இன்னும் பல்லாண்டு காலத்துக்கு மகிழ்வூட்டுவதாயிருக்க வேண்டுமென 'காஞ்சி'யும் தன் வாழ்த்துக்களைப் படைத்துக்கொள்கிறது!

★

# காஞ்சி பொங்கல் மலர்

## கருத்துக்கு நல்விருந்து

நெஞ்சை அள்ளும்
சிறு கதைகள்
தெளிவளிக்கும்
கட்டுரைகள்
இன்சுவை மிகு
கவிதைகள்

பொங்கல் மலர் முல்லை மணம்
முக்கனிச் சாறு
முத்துப்பேழை

கருத்துச் சோலையில் உலவிட!
முத்தமிழ்ச் சுவை பருகிட!





அறிஞர் அண்ணாவின் புதிய சில
**படைப்புகள்**
நிறைந்த
அறிவுப் பெட்டகம்

**காஞ்சி**
**பொங்கல் மலர்**
தேவை குறித்து இன்றே தெரிவித்து வேண்டுகிறோம்

**விலை 1--50**


ஆசிரியர், வெளியிடுபவர், சி. என். அ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-2
86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.